விலை : ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 சுக்கில ஸ்ரீ பங்குனி மீ 11-ம் உ சனிக்கிழமை (24 - 03 - 1990) ஹிஜ்ரி 1410 ஷஃபா 26 ஓசை 34

## இன்று காலை 8.30 மணிக்கு கடைசி இந்திய அணி கல்கத்துடன் போகிறது

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி டக்கு கிழக்கு பகுதிக்கு வந்த இந்திய இராணுவத்தின் கடைசிப் பிரிவு இ று காலை 8 30 மணி அளவில் இலங்கையை விட்டு வெளியேறுகின்றது.

இப்படையணியுடன் இலங்கையில் இருந்த இந்திய இராணுவத்தின் தளபதி லெட்டினன்ட் ஜெனரல் ல்க டும் செல்கின்றார். இலங்கை யில் இருந்து வெளியேறும் இந்தியப் படையணிக்கு சம்பிரதாய பூர்வமான பிரிய விடை வைபவம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இப் பிரியாவிடை வைபவத்தில் இலங்கை அரசின் சார்பில் பாதுகாப்பு இராஜாங்க வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவும் பாதுகாப்பு படைத் தளபதிகளும் வடக்கு கிழக்குமாகாண ஆளுனரும்

(6 - ஆம் பக்கம் பார்க்க)

# "இந்தியப்படை போனதும் மோதல் என்பது வீண்பீதி"

## திருமலையில் ராணுவரோந்து வீதிச்சோதனை நின்றுவிட்டது

### - மகேந்திரராசா

(வவுனியா)

"இந்தியஇராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறியபின்இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல் ஏற்படு மென்று வீணாகப்பீதி கிளப்பிவிடப்பட்டு வருகிறது. இலங்கை இராணு வம் தற்போதுள்ள நிலையிலேயே எப்போதும் இருக்கும். விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்குமிடையி மோதல் ஏற்பட மாட்டாது. இன்று நாட்டில் நிலவும் அமைதி தொடர்ந்து நீடிக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திராசா (மாத்தயா) நேற்று முன்தினம் வவுனியாவில் பத்திரிகையாளர்கள் சந்தித்துக் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

பத்திரிகை நிருபர்களின் இந்தச் சந்திப்பில் திரு. மகேந்திரராசா (மாத்தயா) வுடன் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் (யோகி) கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரும் உடனிருந்தனர்.

திருக்கோணமலையிலிருந்து இந்தியப்படை முற்றாக வெளியேறிச்சென்றபின் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே மோதல் ஏற்படுமென்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். திருக்கோணமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுவந்ததாலும் சிறிலங்கா இராணுவம் முகாம்களைவிட்டுவெளியேறிவந்தாலும் சிங்களக் காடையர்கள் அங்கு தன்னிச்சையாக உலாவிவந்ததாலும்இன்றும் மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதற்குக் காரணமாக இருக்கலாம் ஆனால் இது பற்றி இன்று அஞ்சுவதற்கு எதுவுமே இல்லை.

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தின் ரோந்து நடவடிக்கைகளும் வீதிச்சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

முக்கிய பிரச்சினைகளை முன்வைத்தே இன்று நாம் சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம் தற்போது எமது கோரிக்கைகள் சில நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தியப்படை வெளியேற்றமும் தமிழ்த் தேசிய இராணுவக் கலைப்பும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன என்றும் திரு. மகேந்திரராசா (மாத்தயா) மேலும் சொன்னார்.

எவரும் இருக்கலாம். இது அந்தந்தக் கட்சிகளின் விருப்பத்தைப் பொறுத்தது என்று திரு. மகேந்திரராசா மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

### பிரபாகரன் கொழும்பு செல்வாரா?

தலைவர் திரு. பிரபாகரன் கொழும்பு சென்று இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துவாரா? என்று கேட்ட போது, "அது பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது. ஆனால், யார் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டாலும் பேசப் போகும் விஷங்களும் கோரிக்கைகளும் ஒன்றாகத் தானிருக்கும்" என்று திரு. யோகி குறிப்பிட்டார்.

அமைதியான சூழ்நிலையில் சமாதானப் பேச்சு வார்த்

(6ஆம் பக்கம் பார்க்க)



## கிராமம் கிராமமாக அன்னை பூபதிக்கு அஞ்சலி

### உண்ணாவிரதம் பிரார்த்தனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்னை பூபதி தொடர்பான வைபவங்கள் நேற்று 5ஆவது நாளாக நடைபெற்றது.

வாகரை, ஏறாவூர், புல்லுமலை, வந்தாறுமூலை, வாழைச்சேனை, கிரான்உட்பட 25க்கும் மேற்பட்ட இடங்களில் அடையாள உண்ணாவிரதங்கள், கருத்தரங்குகள் இதுவரை நடைபெற்றுள்ளது. அடையாள உண்ணாவிரதம், கருத்தரங்

(6 ஆம் பக்ககம் பார்க்க)

## மலேஷியாவில் ஏமாற்றப்பட்ட இலங்கையர்கள் அவதி

(கோலாலம்பூர்)

வேலைவாய்புத் தேடி மலேஷியா சென்றுள்ள நூற்றுக் கணக்கான இலங்கையர்கள் ஏஜென்ஸிகளால் ஏமாற்றப்பட்டு அனாதரவான நிலையில் விடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களில் சிலர் மலேஷியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். இவர்களி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## தபால் ஊழியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்

(விசேட நிருபர்)

யாழ்-பிரதம தபாலக சமயா சமய ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படுமென்ற உறுதி மொழியை வடபிராந்திய தபால் திணைக்கள அத்தியட்சகர் திரு. கனகசுந்தரம் நேற்று பகல் ஒரு மணிக்கு ஊழியர்களுக்குத் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வீடு தீக்கிரை!

(இடைக்காடு)

நேற்று இடைக்காட்டில் வீடொன்றுதீப்பிடித்துமுற்றாக எரிந்து சாம்பலானது. வீட்டில் இருந்த பொருட்கள் யாவும் தீயினால் எரிந்து போய் விட்டன. ஆனால் வீட்டில் இருந்தோர் எதுவித பாதிப்பும் இன்றி தப்பித்துக்கொண்டனர்

இன்று நாட்டில் நிலவும் அமைதி தொடர்ந்து நீடிக்கும்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று முன்தினம் வவுனியாவில் பத்திரிகையாளர்கள் சந்தித்துக் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்**

பத்திரிகை நிருபர்களின் இந்தச் சந்திப்பில் திரு. மகேந்திரராசா (மாத்தயா) வுடன் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் (யோகி) கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோரும் உடனிருந்தனர்.

திருக்கோணமலையிலிருந்து இந்தியப்படை முற்றாக வெளியேறிச்சென்றபின் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே மோதல் ஏற்படுமென்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். திருக்கோணமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுவந்ததாலும் சிறிலங்கா இராணுவம் முகாம்களைவிட்டு வெளியேறிவந்தாலும் சிங்களக் காடையர்கள் அங்கு தன்னிச்சையாக உலாவிவந்ததாலும் இன்றும் மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதற்குக் காரணமாக இருக்கலாம் ஆனால் இதுபற்றி இன்று அஞ்சுவதற்கு எதுவுமே இல்லை.

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தின் ரோந்து நடவடிக்கைகளும் வீதிச்சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

முக்கிய பிரச்சினைகளை முன்வைத்தே இன்று நாம் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம் தற்போது எமது கோரிக்கைகள் சில நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தியப்படை வெளியேற்றமும் தமிழ்த் தேசிய இராணுவக் கலைப்பும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன என்றும் திரு. மகேந்திரராசா (மாத்தயா) மேலும் சொன்னார்.

## ஆறாவது திருத்தமும், மாகாணசபையும்

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், ''அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும்படி நாம் எமது பேச்சுவார்த்தைகளின் போது கேட்டிருந்தோம். இதை நீக்குவது சம்பந்தமாக ஜனாதிபதி பிரேமதாசா முயற்சியெடுத்து வருகிறார்.'' என்றார்.

வடக்கு கிழக்கில் புதிய மாகாணசபைக்கான தேர்தல் எப்போது நடைபெறும் என்று கேட்கப்பட்டபோது இலங்கை அரசு தான் இதற்கான தேதியை முடிவு செய்யவேண்டும் என்று திரு. மகேந்திரராசா பதிலளித்தார்.

இச் சமயத்தில் ''இப்போது மாகாண சபை என்று ஒன்று இங்கு இல்லையென்றும் இதனால் இதைக் கலைக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும்'' திரு. யோகி கூறினார்.

## தேர்தலில் யாரும் போட்டியிடலாம்; சர்வதேச பார்வையாளர்கள் தேவை

மாகாண சபைத் தேர்தல் பற்றிய மற்றொரு கேள்விக்கு திரு. மகேந்திரராசா (மாத்தயா) பதிலளிக்கையில் பின்வருமாறு சொன்னார்.

மாகாண சபைக்கான புதிய தேர்தலில் யாரும் போட்டியிடலாம். எந்தக் கட்சியும் போட்டியிடலாம் ஆனால் சர்வதேச பார்வையாளர்கள் நியமிக்கப்பட்ட பின்னரே தேர்தல் நடைபெற வேண்டும்.

மக்களின் ஆதரவு இருப்பதாக நினைப்பவர்களும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறலாம் என்று நினைப்பவர்களும் தேர்தலில் போட்டியிடலாம் என்று திரு. யோகி சிரித்தபடியே கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களாக ஈரோஸ் மட்டுமல்ல தலைவர் திரு. பிரபாகரன் கொழும்பு சென்று இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துவாரா? என்று கேட்ட ... யோகி குறிப்பிட்டார்.

அமைதியான சூழ்நிலையில் சமாதானப் பேச்சு வார்த்

(6ஆம் பக்கம் பார்க்க)

(விசேட நிருபர்)

யாழ்-பிரதம தபாலக சமயா சமய ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென்ற உறுதி மொழியை வடபிராந்திய தபால் திணைக்கள அத்தியட்சகர் திரு. கனகசுந்தரம் நேற்று பகல் ஒரு மணிக்கு ஊழியர்களுக்குத் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)



வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் (யோகி), தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா) உரை நிகழ்த்துவதையும் அருகே மக்கள் முன்னணியின் வவுனியா பிரதேசப் பொறுப்பாளர் திரு. தினேஷ் அமர்ந்திருப்பதையும் இங்கு காணலாம். (தி)

## வீடு தீக்கிரை!

(இடைக்காடு)

நேற்று இடைக்காட்டில் வீடொன்றுதீப்பிடித்துமுற்றாக எரிந்து சாம்பலானது. வீட்டில் இருந்த பொருட்கள் யாவும் தீயினால் எரிந்து போய் விட்டன. ஆனால் வீட்டில் இருந்தோர் எதுவித பாதிப்பும் இன்றி தப்பித்துக்கொண்டனர்

இது தற்செயலாக இடம் பெற்றது.

## தற்கொலை

கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த ஒருவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்துள்ளார்.

குடிபோதையில் மனைவியுடன் ஏற்பட்ட சண்டையில் மனமுடைந்த இவர் தற்கொலை செய்துள்ளதாக தெரிய வருகிறது (லோ)

## மட்டக்களப்பின் தொலைபேசி சீரமைக்க 6 லட்சம் தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொலைபேசி சேவை வழமைக்கு திரும்புவதற்கு ரூபா 6 இலட்சம் பெறுமதியான தொலைபேசி வயர்கள் தேவைப்படுவதாக பிராந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் திரு பி. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

தொலைபேசி வயர் தட்டுப்

(6-ம் பக்கம் பார்க்க)

மன்னாரில்

## அரச திணைக்கள கட்டிடங்கள் திருத்த வேலைகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின்போது சேதமான அரசாங்க திணைக்கள கட்டடங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்

(6-ம் பக்கம் பார்க்க)

## அநுரா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவாரா?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா பண்டாரநாயக்கா வெளியேற்றப்படுவாரா? என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பலமான பேச்சு அடிபடுகின்றது. சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு லண்டனில் வசிக்கும் அநுரா பண்டாரநாயக்காவின் சகோதரியைத் தலைவராக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தியை சிறிலங்கா கட்சி உத்தியோகபூர்வமாக மறுக்காதது தொடர்பாக எழுந்த சர்ச்சையே இதற்குக் காரணம் எனப் பேசப்படுகின்றது.

பத்திரிகையில் வெளிவந்த செய்தியை ஏன் கட்சியின் தலைமைப்பீடம் மறுக்கவில்லை என அநுராபண்டாரநாயக்கா கட்சிசெயலாளருக்கு எழுதிய கடிதம் பத்திரிகையில் வெளிவந்ததைத்தொடர்ந்தே கட்சியில் இருந்து அநுராவை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நஞ்சருந்தி தற்கொலை

(வவுனியா)

வவுனியா குருமன் காடு பகுதியில் கிருமி நாசினி அருந்தி ராஜா அசோக்(வயது 22) என்பவர் தற்கொலை செய்து கொண்டார்.

சில தினங்களுக்கு முன்னர் கிருமி நாசினி அருந்தியிருந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

நேற்றுக் காலை (23.3 90) வைத்திய சாலையில் வைத்தே இவர் இறந்தார். (தி)

ஸ்ரீலங்கா அரசு புலிகளின்

# "பலவீனத்தைக் கண்டு அன்று மோதியது பலத்தைக் கண்டு இன்று பேசுகிறது"

**--- பெண் புலி மாலினி**

(காங்கேசன்துறை)

உலகிலுள்ள வேறெந்த நிறுவனத்திடமும் இல்லாதவாறு புலிகள் நால்வகைப் பலம் பொருந்தியவர்களாக இருக்கிறார்கள். ஆட்பலம், ஆயுத பலம், தார்மீக பலம், சாவதேச ஆதரவும் பலம் என்பனவே அந் நான்குமாகும் இத்தகைய பலம்எம்மிடம் இருப்பதனை ஸ்ரீலங்காஅரசுஉணர்ந்துதான் எம்முடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வந்தது. இதிலிருந்து எமது எதிரிளாக விருந்த அவர்களுடன் நாம் நடாத்தும் பேச்சவார்த்தையை வைத்து எமது போராட்டத்தை கொச்சைப் படுத்தமுடியாது.

இந்திய ஆக்கிரமிப்பாளர்கள இங்குவர யார் அழைத்தார்களோ, அவர்களைக் கொண்டே இந்தியப்படையை வெளியேற்ற நிர்ப்பந்திக்கும் அழுத்தத்தைக் கொடுத்து வெளியேற்றச் செய்தது அரசியல் இராசதந்திர செயற்பாடே எமது ஸ்ரீ லங்கா அரசுடனான பேச்சுவார்த்தையின் பெறுபேறாகும். இதன் பின் எமக்கும், ஸ்ரீ லங்காப் படைகளுக்கும் மோதல் ஏற்படுமெனப் பீதி கொள்வது தவறானது.

இவ்வாறு நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறைநடேஸ்வராக்கலையரங்கில் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட திருமதி. கருணானந்த சிவந்தின் தலைமையில் நடைபெற்ற அன்னை பூபதியின நினைவு அஞ்சலிக்கூட்டத்தில் புலிகளின மாதர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி. மாலினி உரையாற்றும்போதுதெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

புலிகளுக்கும் - ஸ்ரீலங்கா அரசின் படைகளுக்குமிடையில் மோதல் ஏற்படும் சூழ்நிலை இனி இருக்குமாயின் அது தமிழீழத்தின் பிறப்பே என்பதனைச் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். எமது முழுப்பலத்தையும், தமது பலவீனத்தையும் ஸ்ரீலங்கா அரசு நன்கு உணர்ந்துள்ளது. நாம் பலவீனமாக இருந்தபோது எம்முடன் மோத முனைந்த ஸ்ரீ லங்கா அரசு இன்று எமது பலத்தை உணர்ந்தே எம்முடன் பேச முன்வந்துள்ளது.

எமது விடுதலைப் போரில் இதுவரை நாற்பதுக்கும்மேற்பட்ட பெண் போராளிகள் மரணித்துள்ளனர். இவர்களின தியாகத்துக்கு முன்னால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட ' உழுந்து மா, கிலோ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M., No·777 K.K.S Rd, Jaffna.

வசந்தி எலக்ரிக்கல்ஸ் (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) சுன்னாகம் Soiide மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம்(England,ஸ்லோன் பைப்புகள் Hand Pump China (B-366)

### விற்பனையாகிறது

வரலாறு ஆண்டு 6, வரலாறு ஆண்டு 7, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது. ஆக்கம், ஆலோசனை: எம்.எஸ். அப்துல்ரஹீம், தி. கமலநாதன்

### குடும்ப நாவல்

மீரா வெளியீடு கே. எஸ். ஆனந்தன் எழுதிய '' பூஜைக்காக வாழும்பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பூவை ஒருத்தியின் புனித வாழ்வைச் சித்தரிக்கும் குடும்ப நாவல் ராஜன் புத்தகசாலை, ஸ்ரீ காந்புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். B/130

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohman சிவப்பு வெள்ளை ஃபட்டுக் குஞ்சுகள் புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet Hylie Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.
NALLUR FARM CENTRE, 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி நல்லூர். 189,

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்

# உள்ளூராட்சி அலுவலகத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை

(வவுனியா)

வவுனியா பிராந்திய உள்ளூராட்சி அலுவலகத்தில் வேலை செய்வதற்கு போதியளவு ஊழியர்கள் இல்லை. இதனால் இதன்கீழ் இயங்கி வரும் சனசமூக நிலையங்களை இயக்குவதற்கு கஷ்டமாக உள்ளது.

இவ்வாறு வவுனியா பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திரு. தி. நாகேஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படி அலுவலகத்தின் கீழ் 44 சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆனாலும் சிலவற்றுக்கே கட்டடங்கள் உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சனசமூக நிலையங்களுக்கு கடந்த இரு ஆண்டுகளாக எம்மால் வழங்கப்படும் ஆண்டு நிதி வழங்கப்படவில்லை. 89 ஆம் ஆண்டிற்கான நிதி தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எமது பிராந்திய அலுவலகத்தின் கீழ் இரு சனசமூக நிலையங்களின் சமாஜங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன தெரிவிக்கப்பட்டுள்ளது (தி)

என்று தெரிவித்த அவர் போதிய பணம் கைவசம் இல்லாத காரணத்தினால் வேலைத்திட்டங்களை செம்மைப் படுத்த முடியாமல் இருப்பதாகவும் கவலை தெரிவித்தார்.

தற்போது மருக்காரம்பளை இளங்கோ சனசமூக நிலையத்தில் மட்டுமே தையல் பயிற்சி நிலையம் ஆரப்பிக்கப்பட்டு பல பெண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (தி)

## அழி டைந்த பயிர் காப்புறுதிப் பணம் கிடைக்கவில்லை

(வவுனியா)

வவுனியாவில் பம்பைமடு காத் தொழிற் சேவை நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகள் பார்வையிடப் பட்டும், அழிவடைந்த காணிகளுக்கான காப்புறுதிப் பணம் விவசாயிகளுக்கு இன்னமும் வழங்கப் படவில்லை என்று புகார் (தி)

# பொய்ச் சான்றிதழ்களை காண்பித்து 50 ஆயிரம் நிவாரணம் பெற வவுனியாவில் முயற்சிகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்தகால வன்செயல்களினால் நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இவர்களில் பலரின் குடும்பத்தினர்க்கு ரூபா 50 ஆயிரம் நிவாரணமாக வழங்கப்படவில்லை. மரண அத்தாட்சிப் பத்திரப் பதிவுகளில் ஏற்படும் சிக்கலே இதற்குக் காரணம் சின அறிவிக்கப்படுகிறது.

இப்போது மாமடுவ என்ற எங்களப் பிரதேசத்திலிருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது குடும்பத் தலைவர்கள் இறந்துவிட்டதாக ரூபா 50 ஆயிரம் நிவாரணத்துக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த விண்ணப்பங்களில் உள்ள மரண அத்தாட்சிகளைப் பரிசீலனை செய்த கச்சேரி அதிகாரிகள் அவ்வாறு இருக்கும் மரணப்பத்திரங்கள் போலியானவை என்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

மாமடுவ சிங்களப் பிரதேசத்திலுள்ள உத்தியோக ரீதியில் அமைந்த பிறப்பு மரணப் பதிவாளரே இவ்வாறான பொய்ச் சேட்டிபிக்கட்டுக்களை வழங்கி வருகின்றனர் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. (31)

UNIVERSITY OF JAFFNA

Tender for Uninterupted Power Supply System

# அனலைதீவு பிரதேச அபிவிருத்திக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு பிரதேசம் கடந்த பல வருடங்களாக அபிவிருத்தி அற்ற நிலையில் இருந்து வருகிறது என யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு திவகலாலா தெரிவித்தார்.

தீவுப் பகுதியில் பொதுவாகக் காணப்படும் குடிநீர்ப் பிரச்சினை அனலைதீவிலும் உள்ளது. 1982 ஆம் ஆண்டுக்கு முன் தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் இங் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் பின் நீர் இறைக்கும் பம்புகள் பழுதடைந்ததைத் தொடர்ந்து அங்கு நீர் வழங்குவதும் தடைப்பட்டது.

தற்போது அங்கு ஒருவருக்கு இரண்டு நாளைக்கொருமுறை ஒரு கலன் நீர் வீதம் அனலைதீவு பிரதேச சபையால் வழங்கப்பட்டு வருகிறது. பம்புகளைத் திருத்தி அதன் மூலம் பிரதேச சபையே அப்பகுதிக்கான நீர் வழங்கலை செய்வதாயின் பிரதேச சபையிடம் போதுமான நிதிவசதி இல்லை இதற்கான ஊழியர்களை நியமித்து அவர்களுக்கு சம்பளம் வழங்க வசதிகள் இல்லை. இப்பிரச்சினையை அனலைதீவு சனசமூக நிலையம் மூலம் தீர்ப்பதற்கு எதிர்காலத்தில் திட்டங்கள் உள்ளூராட்சி சபையால் தீட்டப்படும் என்றும் அவர் சொன்னார்.

அனலைதீவு புகையிலைக்குப் பேர் போன இடமாகும். நன்னீர்ப் பிரச்சினை ஏற்பட்ட காலந்தொட்டு அங்கு புகையிலை அறுவடை வெகுவாகக் குறைந்துள்ளது. இது சம்பந்தமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் ஆலோசித்து மாரிகால மழை நீரை தேக்கி அவற்றின் மூலம் நீர்ப்பாசனம் செய்வது சம்பந்தமாக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் குறிப்பிட்டார். அடுத்து போக்குவரத்தைப் பொறுத்தவரை இத்தீவில் வீதிகள் சேதமடைந்துள்ளன. மேலும் இங்கு ஒரே ஒரு படகு சேவையே நடத்தப்படுகிறது. அலையரசி என்ற இப்படகு ஊர்காவற்றுறையிலிருந்து காலையில் புறப்பட்டு எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவுக்குப் போகிறது. பின்பு மாலையிலேயே திரும்பி வருகிறது. இதனால் இங்கு ஒரு நேரப் படகு சேவையே நடைபெறுகிறது.

அத்துடன் தனியார் படகுகளில் கட்டுப்பாடின்றி கட்டணம் அறவிடப்படுகிறது. அப்பகுதிமக்கள் பெருந்தொகைப் பணத்தை ஒருநாள் போக்குவரத்துக்கு மட்டும் செலவிடுகிறார்கள். இது ஒருபுறமிருக்க ஊர்காவற்துறையில் உள்ள கண்ணகை அம்மன் துறையில் அலையரசி படகு தரித்து நிற்க முடியாத நிலையில் உளளது. இவ்விறங்குதுறை 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்டதொன்றாகும். இதன் நீளத்தை அதிகரிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஊர்காவற்துறை இறங்குதுறையிலிருந்து ஊர்காவற்துறை சந்தைக்குச் செல்ல வீதிகள் எதுவும் அமைக்கப்படவில்லை. இதற்கு தனியார் காணிகள் ஊடாக பாதை அமைப்பது பற்றி அந்தந்த காணி சொந்தக்காரரிடம் ஆலோசனைகள் செய்யப்படவுள்ளது என்றும் அவர் மேலும் சொன்னார்.

அனலை தீவுக்கான மின் விநியோகம் பல காலத்திற்கு முன்பு நயினாதீவில் உள்ள மின் உற்பத்தி இயந்திரம் மூலம் காடுக்கப்பட்டு வந்தது. ஆனால் பின்பு இது துண்டிக்கப்பட்டு திருத்தப்படாத நிலையில் இருந்து வருகிறது, இந்நிலையினை கருத்திற்கொண்டு இலங்கை மின்சாரசபை மூலம் அனலை தீவுக்கு மின் வழங்கும் திட்டத்திற்கு 25 மில்லியன் ரூபா தேவை என மதிப்பீடு செய்துள்ளேன். இத்தொகைப் பணத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து கூடிய விரைவில் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுப்பேன் எனவும் அவர் கூறினார்.

ஆவே இப்பகுதியில் இவ்வளவு வசதியீனங்களும் காணப்படுவதால் மக்கள் குடும்பம் குடும்பமாக இங்கிருந்து வெளியேறி குடாநாட்டை நோக்கி வசதிகளுடன் வாழ வருவது தவிர்க்க முடியாததாக உள்ளது.

இத்தீவு மக்களுக்கு அத்தீவிலேயே தமது தேவைகளைத் தீர்த்து வைக்கவும் அவர்கள் பொருளாதார ரீதியில் ஒரு மார்க்கத்தைப் பெற்றுக் கொள்ளவும் மிக விரைவில் சகல வசதிகளும் இந்த உள்ளூராட்சி திணைக்களத்தால் செய்து கொடுக்கப்படும் எனவும் ஆணையாளர் உறுதி கூறினார்.

அண்மையில் இப்பகுதிக்கு உதவி ஆணையாளர் விஜயம் மேற்கொண்டிருந்தார். (லோ)

சென்ற வருடம் எமது ஈழ மக்கள் புதுவருடப் பிறப்பைக் கொண்டாட முடியாமல் போன வேளையில் இவ்வருடம் புதிய புத்தாண்டை நடத்துவதற்கு எமதுவீர வேங்கைகள் வழிவகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். வாழ்க ஈழம்! மலர்க அவர்கள் பணி!

ஹரன்
ஸ்போர்ட்ஸ் கிளப்
230, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்
(அங்கத்தவர் களுக்கான மதுபான விற்பனை நிலையம்)
(B-356)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலி

## நயினாதீவு இறங்குதுறை திருத்தப்பட வேண்டும்

(தீவுப்பகுதி)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு முன் பாக உள்ள இறங்குதுறை திருத்தப்படாததனால் பயணிகள் மிகுந்த கஷ்டமடைகின்றனர்.

படகுகளிலிருந்து இறங்குவதோ அன்றி ஏறுவதோ மிகுந்த சிரமமாவதுடன் படகுகளை துறையில் அணைப்பதும் கஷ்டமாக உள்ளது.

கடந்தகாலவன் செயல்களின் போது இந்த இறங்குதுறை சேதமாக்கப்பட்டது தெரிந்ததே. தற்போது ஆலய உற்சவம் நெருங்குவதனால் பிரயாணிகளின் நலனைமுன்

யாழ் நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
BOBBY
(உருது)
இனிய பாடல்களுடன் கூடிய காதல் காவியம்

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

125வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஹாசினி

பாணம். B/130

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohman சிவப்பு வெள்ளை சேட்டுக் குஞ்சுகள் புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet Hylie Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.
NALLUR FARM CENTRE, 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி நல்லூர். 189,

## சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற், சட்டிகள், தாச்சிச் சட்டிகள், ரேகள், சோஸ் பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் மேலும் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

## வாடகைக்கு

வீடியோ பிரதிகள் வாடகைக்கு விடப்படும். ஹப்பி வீடியோ சென்ரர், 613, பீச் றோட், குருநகர். (B-335)

## தேவை

பழைய கொப்பி புத்தகங்கள் தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணா தொழிலகம் இணுவில். (B-350)

## திருமண சேவை நிலையம்

பரமேஸ் கோணேஸின் முன்னணிப் பாடகர் ''விரோ மகேந்திரா'' ஆரம்பிக்கும் மெல்லிசைக் குழுவுக்கு பெண்பாடகிகள் Lead Guitor, Flute, Violin, வாத்தியக் கருவிகள் மீட்டுவதில் திறமையுள்ளவர்கள் உடன் தேவை. திருமண சேவை நிலையம் 6, நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம். (B-308)

SOLE AGENT
FOR
Black and Decker Power Tools, Gestetner Duplicating and Photo Copy, Machines and Gestetner consumables. Remington Tamil Typewriters
SAMUEL SONS & CO LTD.
206, 208, Hospital Road, Jaffna.

---

...நாள் நாற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இவர்களில் பலரின் குடும்பத்தினர்க்கு ரூபா 50 ஆயிரம் நிவாரணமாக வழங்கப்படவில்லை. மரண அத்தாட்சிப் பத்திரப் பதிவுகளில் ஏற்படும் சிக்கலே இதற்குக் காரணம் என அறிவிக்கப்படுகிறது.

இப்போது மாமடுவ என்ற எங்களப் பிரதேசத்திலிருந்து நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது குடும்பத் தலைவர்கள் இறந்துவிட்டதாக ...உள்ள மரண அத்தாட்சிகளைப் பரிலனை செய்த கச்சேரி அதிகாரிகள் அவ்வாறு இருக்கும் மரணப்பத்திரங்கள் போலியானவை என்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

மாமடுவ சிங்களப் பிரதேசத்திலுள்ள உத்தியோகரீதியில் அமைந்த பிறப்பு மரணப் பதிவாளரே இவ்வாறான பொய்ச் சேட்டிபிக்கட்டுக்களை வழங்கி வருகின்றனர் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. (31)

## UNIVERSITY OF JAFFNA

## Tender for Uninterupted Power Supply System

Sealed TENDERS, along with detailed technical specifications and particulars of operational Conditions and facilities of after sales service, are invited for the supply of uninterupted power supply system.

The specifications are given belowz

| | | |
|---|---|---|
| Power Source | : | Single phase - 50 Herts |
| Rating | : | Continuous 1, 5/3. 0/5. 0/10.0 KVA at 240V, Sine wave |
| Cut Off Levels | : | 200V (Lower) and 250 (Upper) |
| Operations | : | Normal A.C/Battery D.C/ By-Pass |
| Back up time | : | Not less than 10 minutes at full load and 30 minutes at 50% load preference will be given for higher back up time. |
| Indications | : | Distinctive Audio (Buzzer Aarm) and visual indications in cases of malfunction / cut-off stages / commercial power failure. Audio visual indications for input / output and battery charging-Discharging |
| Additional | : | Quotation shall detail Installation's |
| Requirements | : | Enviromental Conditions / Physical Characteristics / Circuit Diagrams / External Connectors / Voltage and Frequency Regulations / Type of cooling. |
| Accessories | : | Batteries. Basic SERVICE Tools. |

Please send your sealed TENDERS in quadruplicate on or before 2-00 p. m. on 06-04-1990 to THE BURSAR, University of Jaffna. Jaffna and has the Please indicate reference NO. S/C/U/UPS/01/1990. On the left hard of the envelope Tnaders will be opened on the same day at 2-30 p. m.

Registrar (B-384)

---

இவ்வருடம் புதிய புத்தாண்டை நடத்துவதற்கு எமதுவீர வேங்கைகள்வழி வகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். வாழ்க ஈழம்! மலர்க அவர்கள் பணி!

### ஹரன் ஸ்போர்ட்ஸ் கிளப்

230, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்
(அங்கத்தவர்களுக்கான மதுபான விற்பனை நிலையம்) (B-356)

---

3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்டதொன்றாகும். இதன் நீளத்தை அதிகரிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை இறங்குதுறையிலிருந்து ஊர்காவற்துறை சந்தைக்குச் செல்ல வீதிகள் எதுவும் அமைக்கப்படவில்லை. இதற்கு தனியார் காணிகள் ஊடாக பாதை அமைப்பது பற்றி அந்தந்த காணி சொந்தக்காரரிடம் ஆலோசனைகள் செய்யப்படவுள்ளது என்றும் அவர் மேலும் சொன்னார்.

## நயினாதீவு இறங்குதுறை திருத்தப்பட வேண்டும்

(தீவுப்பகுதி)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு முமாக உள்ள இறங்குதுறை திருத்தப்படாததனால் பயணிகள் மிகுந்த கஷ்டமடைகின்றனர்.

படகுகளிலிருந்து இறங்குவதோ அன்றி ஏறுவதோ மிகுந்த சிரமமாவதுடன் படகுகளை துறையில் அணைப்பதும் கஷ்டமாக உள்ளது.

கடந்தகாலவருட செயல்களின் போது இந்த இறங்குதுறை சேதமாக்கப்பட்டது தெரிந்ததே. தற்போது ஆலய உற்சவம் நெருங்குவதனால் பிரயாணிகளின் நலனைமுன் விட்டு இந்த இறங்குதுறை உடனடியாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (15)

---

## பூந்தருக்கு

(கலர்)
**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

125வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்தகாட்சிகள்
**வெலிங்டன் (யாழ்)**
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

**ஸ்ரீதர் (யாழ்)**
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

---

# 31-ம் நாள் நினைவு அஞ்சலி



மண்ணில்: 12-09-1905 விண்ணில்: 22-02-1990

**அமரர் செல்லையா செல்லம்மா**
(திருச்செல்வம் மேரி ஆன்)

உள்ளமெங்கும்
ஊன் றியவர்
உன் பிரிவை
உள்ளம் நொந்து

அன்புவிதை
வேளையிலே
எண்ணியெண் ணி
அழுவதினால்

ஊன்றி வளர
உயிர் பிரிந்து
உள்ளம் நொந்து
உள்ளுயிர்த்தாள்

விரைந்தனை
போயினை
அழுகிறோம்
மீளுமோ?

மகள், பேரப் பிள்ளைகள்
பூட்டப் பிள்ளைகள்
R-151

---

## வவுனியாக் கச்சேரியில் பல பதவிவெற்றிடங்கள்

(வவுனியா)

வவுனியாக் கச்சேரியில் பல திணைக்களங்களில் பல்வேறு பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இப்பதவிகள் எதுவும் நிரப்பப்படாதிருக்கின்றன.

காணித்திணைக்களத்தில் பிறப்பு இறப்புப் பதிவு செய்யும் விஷேகர்கள் மூவரே வேலை செய்கின்றனர். இதனால் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிறப்பு, இறப்புப் பதிவுகளைப் பதிவு செய்ய முடியாத நிலை இங்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிறுவஅளவைத்திணைக்களத்தில் உதவியாளர்கள் எவரும் இல்லை. இங்கு 4 உவியாளர்களுக்கு இடம் உண்டு. ஆனால் இப்பதவிகள் வெற்றிடங்களாகவே விடப்பட்டுள்ளன.

இதனால் இந்தப் பகுதிகளில் முறையாக வேலைகள் நடைபெற முடியாதுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

புதுவருடப் பிறப்பை
முன்னிட்டு
விசேட கழிவுடன்
எம்மிடம்
கிழ்க்கண்ட பொருட்களை
பெற்றுக் கொள்ளலாம்!

கயிறு துப்புத்தடி,
சாக்குத்தடி
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள சிறந்த
இடம்

**சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ்**
234, (76), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
B/355

---

வடபகுதி கடற்றொழிலாளருக்கு மலிவு விலையில் கீழ்க்கண்ட பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

11/2 மி மீ. 2 மி. மீ. நைலோன், கொர்லோன் நூல் வகைகளை சகாய விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்!

**சென் அன்ரனீஸ்**
40, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
B/290

# ஜம்மு காஷ்மீரில் மழை, வெள்ளம்
# நிலச்சரிவு - 25 பேர் பலி; வீடிழப்பு

(ஸ்ரீ நகர்)

இந்தியாவின் மாநிலமான, காஷ்மீர்ப் பகுதியின் மலைப் பகுதியில் உறை பனியினாலும் கடும் மழையினாலும் ஏறக் குறைய 25 பேர் இறந்துள்ளனர். ஜம்மு பகான் கோட் பிரதான வீதிகளில், ஓடையில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கினால் 15 நபர்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி அடித்துச் செல்லப்பட்டது. மேலும் வத்தார் பகுதியில் கடும் புயலினால் 11 பேர் வரை இறந்துள்ளார்கள்.

அதே வேளை ஜம்முப் பகுதியில் முழுவதும் பெய்த பலத்த மழையினால் ஆறுகளும் ஓடைகளும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதில் வீதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு வழமையான நிலை சீர்குலைந்துள்ளது. காஷ்மீர் பள்ளத் தாக்குப் பகுதிகளில் கூட கடந்த 3 நாட்களாக கடும் மழையும் பனியும் பெய்த சீலம் நதியில், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் ஸ்ரீ நகரிலும் சீலம் ஆற்றுக் கரையிலும், தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. வெள்ள நிவாரண வேலைகளை மாநில ஆளுணர் ஜக் மோகன் ஆரம்பித்துள்ளனர். இதற்காக ஸ்ரீ நகருடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு வெள்ள நிலைமையை அறிந்து வருகிறார்.

மேலும் ஹிமாலயப் பிரதேசத்திலும் இம் மழையினாலும் உறைபனியாலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வழமையான நிலைமை பாதிப்படைந்து வருகிறது.

## வேலணையில் மூலவள நிலையம்

(தீவுப்பகுதி)

மூலவள நிலையமொன்று வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இந் நிலையத்திற்கு அரசு 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியிருந்தது. அந்த நிதியைக் கொண்டு தற்போது தளபாடங்கள் செய்யப்பட்டுள்ளது.

இந்த மூலவள நிலையம் பற்றி வேலணை கோட்ட கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. எஸ். சண்முகநாதன் கருத்து தெரிவிக்கையில் இந்த மூலவள நிலையமூடாக சமய, சமூக, கலை, கலாசார துறைகளில் மாணவர் சமுதாயத்தை ஈடுபடுத்தி நற்பிரஜைகளாக்கவும், தொழில் சார்ந்த கல்வியை ஊட்டி நெறிப்படுத்தவும் உதவும் என்றார். (15)

## தமிழகத்திலிருந்து 6 பேர் ராஜ்ய சபைக்கு தெரிவு

(சென்னை)

தமிழ் நாட்டிலிருந்து ஆறு பேர் இந்திய பாராளுமன்ற மாநிலங்கள் அவைக்கு போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவர் தி.மு.க. உறுப்பினர்கள் ஒருவர் அ.தி.மு.க. உறுப்பினர் தற்போது மாநிலங்கள் அவையில் உள்ள தி.மு.க. உறுப்பினர்களான திரு. வை. கோபாலசாமியும், திரு. ப. கிருஷ்ணனும் இதில் இடம் பெறுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் அடுத்த மாதம் 8 ஆம் திகதி முடிவடைகிறது.

திருவாளர்கள். வி.க.கணேசன், கே.கே. வீரப்பன், முகமது சாஹி ஆகியோரே ஏனைய தி.மு.க. உறுப்பினர்களாவர்.

அ.தி.மு.க. விலிருந்து தெரிவு செய்யப்பட்டவர் திரு எஸ் மாதவன்

இதேவேளை மாநிலங்கள் அவையில் தி.மு.கவின் தொகை இனிமேல் பத்தாகிறது. அ.தி.மு.கவின் தொகை ஆறிலிருந்து நான்காக குறைந்துள்ளது.

## கண்காட்சி

(வடமராட்சி கிழக்கு)

இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், முறைசாராக்கல்வி, பனம் பொருள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி நடைபெற்றது.

## தேர்தலைக் கண்காணிக்க குழு

(லண்டன்)

பொதுநலவாய நாடுகளில் தேர்தல்களைக் கண்காணிப்பதற்கு குழு ஒன்றை நியமிப்பதற்கு பொதுநலவாய நாடுகளின் உயர் அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

கோலாலம்பூரில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றைத் தொடர்ந்தே இம் முயற்சி மேற்கொள்ளப்படுகிறதாம். தேர்தல்களை ஒழுங்காக நடத்துவன் மூலம் பொதுநலவாய நாடுகளில் ஜனநாயகம் சீரமையும் என உச்சி மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## இருஇளம்பெண்கள்சண்டை கலகமாக மாறி 5 பேர்பலி!

(கராய்ச்சி)

தெற்குப் பாகிஸ்தான் பகுதியில் கடந்த புதன் கிழமை இரண்டு இளம் பெண்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 5 பேர் வரை கொல்லப்பட்டு முப்பது பேர்வரை காயமடைந்ததாக அப்பகுதி பொலிசார் தெரிவிக்கின்றனர்.

ஹைதராபாத் உயர் கல்விப் பாடசாலை மாணவிகளுக்கும் அப்பகுதி சிந்திப் பாடசாலை பெண்களுக்கும், இவர்கள் மொகிஜிர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களால் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிவினையின் போது இங்குவந்தவர்கள் இடையில் நடைபெற்ற மோதலை பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தும் தடுத்தனர். இதில் இரு பெண்கள்காயமுற்றனர்.

கடந்த இரண்டரை வருடங்களுக்குமுன்புஇனப்பிரச்சினை காரணமாக 250 மக்கள்வரை ஹைதராபாத்தில் இறந்துள்ளனர். இவ்விடமான பாகிஸ்தானின் தலைநகரானகராச்சியில் இருந்து 175 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது.

## இந்தியா - சீன எல்லைப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணலாம்

(புதுடில்லி)

இந்தியாவுடன் இன்னதும் தீர்க்கப்படாமலேயே இருந்து வரும் எல்லைப் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு ஒன்று காணப்படலாம் என சீனாவின் வெளியுறவு அமைச்சர் சியாங்சி சென் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ கே. குஜரால் வியாழக்கிழமை புது டெல்லியில் வழங்கிய அரசு விருந்தொன்றில் இத்தகவலை வெளியிட்டார். சமாதான சகவாழ்வின் ஐந்து கொள்கைளை கொண்ட பஞ்ச சீல நெறிகளின் அடிப்படையில் மேலும் சிறப்பான நல்ல அண்டைநாட்டு உறவுகளை தேடி வளர்த்துக்கொள்வதற்கு இந்தியாவுடன் ஒத்துழைப்பதற்கு சீனா தயாராக இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தென் ஆசியாவில் ஒரு மிகப் பெரும் நாடு என்ற முறையில் இந்தியா இந்தப் பிராந்தியத்தில் அமைதியையும் அபிவிருத்தியையும் நிலை நாட்டச் செய்வதில் முக்கியபங்கினை வகிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சீனாவின் வெளியுறவு பற்றிப் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜரால் கடந்த சில ஆண்டுகளில் சீன இந்திய உறவுகளில் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார். கடந்த வருடத்தில் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி ஏற்படுத்திய சுமுக நிலையை மேலும் தாம் முன்னேற்றுவதாகஅவர் குறிப்பிட்டார்.

## கோணாவில் பாடசாலைக்கு கல்வியதிகாரி பாராட்டு

(கிளிநொச்சி)

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கக் கோப்பைகளைப் பரிசாகப் பெற்றவர்கள், அடுத்தமுறை தோற்றுப்போவதும், இம்முறை தோற்றவர்கள் தமது விடா முயற்சியால், அடுத்த ஒலிம்பிக் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தமது நாட்டிற்குப் பெருமையைத் தேடித்தந்த சரித்திரங்கள் பல உண்டு.

ஆதலால் இன்று நடைபெற்ற போட்டிகளில் பரிசு பெறத்தவறியவர்கள் தொடர்ந்தும் முயற்சி செய்தால் அடுத்த போட்டியில் முதலாம் இடத்தைப் பெற முடியும்.

கோணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மெய் வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி கல்வி அதிகாரி, திரு.பொன்சபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. கனக சபாரெத்தினம் தலைமையில், கோணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் திரு. பொன் சபாபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் கோணாவில் கிராமமும் ஒன்று. இக்கிராமத்தில் வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மலையகத்திலிருந்து வந்த தோட்டத் தொழிலாளர்களாவர். அந்த வறிய மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் இப்பாடசாலை மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி சில போட்...

## கேடயம் அன்பளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

பளை கொத்தணியிலுள்ள மாசார் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் வெற்றியீட்டிய இல்லத்திற்கு வழங்குவதற்கான கேடயத்தினை பச்சிலைப்பள்ளி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

இல்ல மெய்வல்லுநர் போட்டியன்று பச்சிலைப்...

## கல்முனையில் மீண்டும் சமய வழிபாடுகள்

(அம்பாறை)

கடந்த பல வருடங்களுக்குப் பின்னர் கல்முனைப் பிரதேசத்தில் அமைதி நிலை தோன்றியதைத் தொடர்ந்து இங்குள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் வருடாந்த உற்சவங்கள், சமயநிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

கல்முனை திரு இருதயத் தேவாலயத்தில் முதன் முதலாக பாஸ்கை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் கல்முனை பங்குத் தந்தை அருட் திரு. நோபேட் மகளும் மற்றும் கிறிஸ்தவ இளைஞர்களும் சேர்ந்து செய்து வருகின்றனர்.

இவ்வாலயத்துக்கு முதன் முதலாக யேசுவின் திருவுருவச் சிலையொன்றும் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (48)

## முகாமையாளர் இடமாற்றம்

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் திரு. எஸ் சிவானந்தன் சாவகச்சேரியில் புதிதாகத் திறந்து வைக்கப்படவுள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் கடமையாற்றிய திரு. எஸ். சிவராஜா பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## கல்முனை-யாழ் பஸ்சேவையை மீண்டும் நடாத்தக் கோரிக்கை

(அம்பாறை மாவட்ட நிருபர்)

கல்முனையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகள் தற்போது மட்டக்களப்பிலிருந்து அதிகாலையில் புறப்படும் பஸ் வண்டியில் செல்வதற்காக முதல் நாளே கல்முனையிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பில் பல சிரமங்களுக்கு மத்தியில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதே போன்றுதான் யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனை வருபவர்கள் மட்டக்களப்பு வரையும் வந்து அங்கு தங்கித்தான் மறுநாள் காலை கல்முனைக்கு வந்தடைய வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

மற்றும் ஆசனங்களைப் ...

மாணவர்கள், மற்றும்பொது மக்கள் கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் உயரதிகாரிகளை மனுஜர்கள் மூலம், நேரடியாகவும் கேட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

இது விடயத்தில் போக்குவரத்து அமைச்சராவது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தனர். (48)

## விபரங்கள் சேகரிப்பு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வேலையற்ற இளைஞர்களின் விபரங்கள், அநாதைகள், வலதுகுறைந்தவர்கள், ஆதரவு அற்றவர்கள், விதைவைகள் ஆகியோர்களின் விபரங்களை கொழும்புத்துறை கிராமசேவையாளர் ஜே.எம். டோமினிக் திரட்டி வருகிறார்.

## கஞவாஞ்சிக்குடி வங்கிகளில் பணப்புழக்கம் இல்லை

(கல்லாறு - களுவாஞ்சிக்குடி)

யுள்ளடக்கி, களுவாஞ்சிக்குடி ...

## மாணவர்களுக்கு இடையில் நெடுந்தீவில் கருத்தரங்கு

நாட்டிற்குப் பெருமையைத் தேடித்தந்த சரித்திரங்கள் பல உண்டு.

ஆதலால் இன்று நடைபெற்ற போட்டிகளில் பரிசு

## கேடயம் அன்பளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

பளை கொத்தணியிலுள்ள மாசார் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் வெற்றியீட்டிய இல்லத்திற்கு வழங்குவதற்கான கேடயத்தினை பச்சிலைப்பள்ளி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

இல்ல மெய்வல்லுநர் போட்டியன்று பச்சிலைப் பள்ளி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு. செல்வராசா வெற்றியீட்டிய இல்லமான விபுலானந்தர் இல்லத்திற்கு கேடயத்தினை அவரே நேரடியாக வழங்கினார். (36)

அதிகாரி, திரு.பொன்சபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. கனக சபாரெத்தினம் தலைமையில், கோணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. பொன் சபாபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் கோணாவில் கிராமமும் ஒன்று. இக்கிராமத்தில் வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மலையகத்திலிருந்து வந்த தோட்டத் தொழிலாளர்களாவர். அந்த வறிய மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் இப்பாடசாலை மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி சில போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. தொடர்ந்து முயற்சித்தால் இம்மாவட்டத்திலுள்ள சிறந்த பாடசாலைகளின் வரிசையில் இப்பாடசாலையின் பெயரும் இடம் பெறும் என்றார்.

கள், சமயநிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

கல்முனை திரு இருதயத் தேவாலயத்தில் முதன் முதலாக பாஸ்கை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் கல்முனை பங்குத் தந்தை அருட்திரு. நோபேட் மகளும் மற்றும் கிறிஸ்தவ இளைஞர்களும் சேர்ந்து செய்து வருகின்றனர்.

இவ்வாலயத்துக்கு முதன் முதலாக யேசுவின் திருவுருவச் சிலையொன்றும் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (48)

## முகாமையாளர் இடமாற்றம்

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் திரு. எஸ் சிவானந்தன் சாவகச்சேரியில் புதிதாகத் திறந்து வைக்கப்படவுள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளைக்கு முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் கடமையாற்றிய திரு. எஸ். சிவராஜா பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## கல்முனை-யாழ் பஸ்சேவையை மீண்டும் நடாத்தக் கோரிக்கை

(அம்பாறை மாவட்ட நிருபர்)

கல்முனையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகள் தற்போது மட்டக்களப்பிலிருந்து அதிகாலையில் புறப்படும் பஸ் வண்டியில் செல்வதற்காக முதல் நாளே கல்முனையிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பில் பல சிரமங்களுக்கு மத்தியில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதே போன்றுதான் யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனை வருபவர்கள் மட்டக்களப்பு வரையும் வந்து அங்கு தங்கித்தான் மறுநாள் காலை கல்முனைக்கு வந்தடைய வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

மற்றும் ஆசனங்களைப் பதிவு செய்து செல்வதும் கல்முனைப் பயணிகளுக்கு முடியாததொன்றாக இருந்துவருகின்றது. ஆசனங்களைப் பதிவு செய்யவேண்டுமானால் இன்னுமொரு நாள் மட்டக்களப்புக்கு முந்திச் செல்ல வேண்டும்.

இவ்வாறான சிரமங்களைப் போக்க கடந்தகாலங்களைப் போல தினமும் கல்முனையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவையை நடாத்தவேண்டுமென கல்முனையிலுள்ள யாழ்.வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், மற்றும் பொது மக்கள் கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் உயரதிகாரிகளை மஜர்கள் மூலம், நேரடியாகவும் கேட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

இது விடயத்தில் போக்குவரத்து அமைச்சராவது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தனர். (48)

தாக அவர் குறிப்பிட்டார்.

## விபரங்கள் சேகரிப்பு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வேலையற்ற இளைஞர்களின் விபரங்கள், அநாதைகள், வலதுகுறைந்தவர்கள், ஆதரவு அற்றவர்கள், விதவைகள் ஆகியோர்களின் விபரங்களை கொழும்புத்துறை கிராமசேவையாளர் ஜே.எம். டோமினிக் திரட்டி வருகிறார்.

## களுவாஞ்சிக்குடி வங்கிகளில் பணப்புழக்கம் இல்லை

(கல்லாறு - களுவாஞ்சிக்குடி)

மிகப் பரந்தளவு கிராமிய வாடிக்கையாளர்களைக் கொண்டு அதிகளவு பிரதேசங்களையும் (மண்டூர், வெல்லாவெளி, போரதீவு, பழுகாமம், குருக்கள்மடம், கல்லாறு) குறிப்பாக விவசாயிகளையும் யுள்ளடக்கி, களுவாஞ்சிக்குடியில் மக்கள் வங்கி கிளையும், இலங்கை வங்கி கிளையும் இயங்குகின்றன.

ஆனால் இக்கிளைகளில் பல வருடங்களாக காசு கொடுக்கல் வாங்கல்களுக்கான கருமபீடங்கள் இயங்கவில்லை. இவற்றில் இலங்கை வங்கிக்கான பணக் கொடுக்கல் வாங்கல்கள் கருமபீடம் மட்டக்களப்பிலும், மக்கள் வங்கிக்கான பணக் கொடுக்கல் வாங்கல் கருமபீடம் கல்முனையிலும் இயங்குகின்றன. பாதுகாப்பு கருதியே இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதனால் குறித்த வங்கி வாடிக்கையாளர்கள் தங்கள் பண கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இரு தினங்களைச் செலவழிக்க வேண்டியிருப்பதுடன் மேலதிக நீண்டதூரப் பிரயாணங்களையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

நிலைமை வழமைக்குத் திரும்பியும் குறித்த இரு கிளை நிலையங்களும் இன்னும் பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கருமபீடங்களைத் திறக்காதது குறித்து வங்கி வாடிக்கையாளர்கள் பெரிதும் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (45)

## மாணவர்களுக்கு இடையில் நெடுந்தீவில் கருத்தரங்கு

(வேலணை)

மாணவர்கள் புத்தகக்கல்வியுடன் நிற்காமல் விளையாட்டுக்கள் சாரணீயம், முதலுதவி, கலை கலாசார நிகழ்ச்சிகள் என்பவற்றிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரவேண்டியது மிக மிக அவசியமானது.

விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வி. கஸ்ரோ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற மாணவர்களுக்கிடையிலான கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். அக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்றைய நிலையில் புத்தகப் பூச்சிகளாக இருப்பதில் பயனில்லை. சமுதாய மாற்றங்களுக்கு அவர்களும் இடம் கொடுக்க வேண்டியவர்களாக இருப்பதால், வெளியுலகத் தொடர்புகளிலும் அவர்கள் ஈடுபட வேண்டும்.

அத்துடன் பத்திரிகை, வானொலி மற்றும் பல தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டு, அதில் வருகின்ற நல்ல ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துக்கொண்டு, அதன்படி நடக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்,

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மாணவர்களினது பங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்.

## ஜனசக்தி, உணவு முத்திரை அனுப்ப வவுனியா கச்சேரி தாமதம்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு கச்சேரியால் அனுப்பி வைக்கப்படும் உணவு முத்திரைகளுக்கான பொருட்களும், ஜனசக்தி உதவிப் பொருட்களும் தாமதமாகவே வந்து சேருகின்றன என்று வவுனியா கூட்டுறவு சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. வீரசிங்கம் தெரிவித்தார்.

மாதாமாதம் முதலாம் திகதியில் அனுப்பி வைக்கப்பட வேண்டிய மேற்படி உணவுப் பொருட்கள் கச்சேரியிலிருந்து 20ஆம் திகதியளவிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றன, இதனால் மக்களுக்குத் தாமதமாகவே மேற்படி பொருட்களை விநியோகிக்க வேண்டி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதே சமயம் கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தில் அதிகளவிலான சீனி கொள்வனவு செய்யப்படுவதில்லை. இதனால் எமது சமாஜத்திடம் பணமிருந்தும் கூடுதலான சீனியை பெறமுடிவதில்லை என்றும் குறிப்பிட்டார்,

1989 ஆம் ஆண்டு வரட்சி முத்திரைகள் வழங்கப்பட்டும் இதற்கான அரிசி முழுமையாக சங்கங்களுக்கு வழங்கப்படவில்லை இதனால் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (தி)

## பொத்துவிலில் மக்கள் முன்னணி கிளை அங்குரார்ப்பணக்கூட்டம்

(அம்பாறை)

சகல தொழிலாளர்களினதும், விவசாயிகளினதும் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும், போராடுவது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பத்து குறிக்கோள்களில் ஒன்றாகும்.

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த திராய்க்கேணிக் கிராமத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளை அங்குரார்ப்பண கூட்டம் திராய்க்கேணி அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் திரு. கஸ்ரோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்த நாட்டிலுள்ள சாதி அமைப்பை முற்றாக ஒழித்து சமத்துவமான ஒரு சமூக அமைப்பினை உருவாக்குவதும், இன ஒத்துழைப்புக்கும், சமாதானத்திற்கும், சுகவாழ்வுக்கும் பாடுபடுவதும், பெண் ஒடுக்கு முறையை எதிர்த்து, பெண்களின் விடுதலைக்காகப் போராடுவதுமே மக்கள் முன்னணியின் குறிக்கோள்களில் சிலவாகும்.

மக்கள்முன்னணியில் உள்ள உறுப்பினர்கள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் போல் செயல்பட முடியாது'' என்றும் கூறினார். (48)

## உடுத்துறை மகாவித்தியாலய மாணவருக்கு பரீட்சையில் சித்தி

(பருத்தித்துறை)

மிகப் பின் தங்கிய பகுதியாகிய வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்திலிருந்து க. பொ. த (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்றிய ஐந்து மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்று சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளனர்.

இப்பாடசாலையில் இருந்து ஏழு மாணவிகள் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்ற மாணவிகளான செல்விகள் ரீ. புஸ்பவதி, ஆர். தெய்வராணி, ரீ. விஜயநஞ்சனா, பீ. இலட்சியமலர், ரீ. ஜெயலதா தவிர செல்வி. யே. ஞானசோதி மூன்று பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து தமிழிற்குத் தோற்றிய சகல மாணவிகளும் சித்தியடைந்துள்ளனர். இந்து நாகரிகத்திற்குத் தோற்றிய மாணவிகள் ''ஏ'' தரச்சித்தி ''பீ'' தரச்சித்திகளையும் பெற்றுள்ளனர். வடமராட்சி கிழக்கின் மிகப் பின்தங்கிய பகுதியான இப்பகுதியின் பாடசாலையிலிருந்து இப் பரீட்சைக்குத் தோற்றி இப்பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமையினால் இப்பாடசாலை பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. (25)

## பச்சிலைப்பள்ளியில் அன்னை பூபதி நினைவு

(வடமராட்சி கிழக்கு)

அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, பச்சிலைப்பள்ளிப் பகுதியில் பல்வேறு இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பந்தல்களில் அன்னை பூபதியின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு, அலங்கரிக்கப்பட்டுள்ளன. (36)

## நிதிஒதுக்கப்பட்டு இரண்டுவருடங்களின் பின்னர் தற்போது வேலை ஆரம்பம்

(வவுனியா)

மின் விநியோகத் திட்டத்திற்காக வவுனியாவில் சில பகுதிகளுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால், இதற்கான வேலைகள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மருக்காரம்பளை சாஸ்திரி கூழாங்குளம், நெருக்குளம் ஆகிய பகுதிகளிலேயே மேற்படி மின் விநியோகம் வழங்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா உதவி அரசாங்க அதிபர் இவ்வேலைத் திட்டங்களை விரைவாகச் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (தி)

## புற்றளையில் 11 மாணவர் சித்தி

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திலிருந்து 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பதினொரு மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆகக் கூடுதலான மாணவர்கள் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் புற்றளை மகா வித்தியாலயத்திலேயே சித்தி அடைந்துள்ளனரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

புது வருடமே! ஈழமக்கள்
உன்னைக்கொண்டாடும்
இவ்வேளையில் மக்கள்
இன்னலின்றி வாழ
புது வருடப்
பிறப்பிலே கந்தன்
அருள் புரிவாராக!

இன்று யாழ். நகரில்
அன்பு உபசரணையுடன்
உங்களை வரவேற்று
சுகாதார முறைப்படி
உங்கள் வாய்க்கு
ருசியாகஉண்பதற்கு
உணவு வகைகளை
உங்களுக்கு பரிமாற
காத்திருக்கின்றார்கள்.

ஹரன்
போசனசாலை
230, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.
B.367

## விளையாட்டு மைதானத்தைத் திருத்தியமைக்க வேண்டுகோள்

(தீவுப்பகுதி)

திவுப்பகுதியில் கேந்திர கல்விக்கூடமாக விளங்கும் வேலணை சேர். வைத்திலிங்கம் மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமான நாலு ஏக்கர் விஸ்தீரணமுள்ள விளையாட்டுத் திடலைத் திருத்தி அமைத்து, சகல வசதிகளும் கொண்ட திடலாக ஆக்கித்தர வேண்டுமென புனர்நிர்மாண கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி குழுக் கூட்டத்திலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வன்செயல்களின் போது அகதிகள் முகாமாகப் பாவிக்கப்பட்ட மேற்படி கல்லூரியின் இரு விடுதிகளும் ஐந்து இலட்சம் ரூபா செலவில் திருத்தம் செய்யப்பட்டுள்ள போதும் முற்றாக சேதமாக்கப்பட்ட மின் இணைப்பைத் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்விரு விடுதிகளிலும் முறைசாராக்கல்விப் பயிற்சி, மூலவள நிலையம், வதிவிடப் பயிற்சி என்பவற்றிற்குத் தற்போது பயன்படுத்தப்பட்டு வருவதால் இவற்றைத் திருத்தியமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (15)

## நெல்லியடியில் நிவாரணம்

(பருத்தித்துறை)

இலங்கை வங்கி நெல்லியடிக்கிளையில் இம்மாதம் 24 ஆம் 25 ஆம் திகதிகளில் நான்கு கிராம சேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1138 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணம் 1000 ரூபா வழங்கப்படவுள்ளதாக இலங்கை வங்கி நெல்லியடிக்கிளை அறிவித்துள்ளது.

24 ஆம் திகதி சனிக்கிழமை கரவெட்டி மேற்கைச் சேர்ந்த 428 குடும்பங்கள் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரணவாய் கிழக்கைச் சேர்ந்த 428 குடும்பங்கள், கரணவாய் மேற்கைச் சேர்ந்த 130 குடும்பங்கள் கரணவாய்மத்தியைச் சேர்ந்த 152 குடும்பங்கள். (25)

## வலை பந்தாட்ட போட்டி

(நெடுந்தீவு)

அண்மையில் நெடுந்தீவு றோ. க. மகளிர்வித்தியாலயத்தில் வருடாந்த வலைப் பந்தாட்ட போட்டி இல்லங்களுக்கிடையில் நடைபெற்றது. மஞ்சள் இல்லம் சாம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது. சிறந்த வீராங்கனையாக செல்வி ஜெ. அன்ரனிற்றா தெரிவு செய்யப்பட்டார் அதிபர்அருட்செல்விலொறன்ரினா தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளை உப அதிபர் திரு. எம் எஸ் ஏ ஒஸ்வேல்ட் நெறிப்படுத்தினார். (25)

## இன்று நடைபெறும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலய "இல்ல மெய் வன்மைப் போட்டி" இன்று சனிக்கிழமை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய இந்து கலை கலாசார மண்டப முன்றலில் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது. (22)

விற்பனையாகின்றன

நாவலர் நமக்களித்த களஞ்சியங்கள் சைவ பரிபாலனசபையின் நூற்றாண்டு வெளியீடுகளாக வெளிவந்துவிட்டன.

சைவ வினாவிடை (முதலாம் புத்தகம்)
இலக்கணச் சுருக்கம் (மூன்றாம் புத்தகம்)

ஆசிரியர், மாணாக்கர், சமய அபிமானிகள் மொழியறிவின் முட்டறுத்து மொழியயிலும் ஆர்வமுள்ளோர் அனைவருக்கும் பயன்தரும், பழம்பெரும் நூல்கள் புதிய பதிப்பில் உங்களுக்குக் கிடைக்குமிடம்

சைவப்பிரகாச
அச்சியந்திரசாலை
450, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம். B/360

புதுவருட தினத்தில்
உங்கள் சேட்,
லோங்ஸ்

முதலியவற்றை
அழகிய வடிவதில்
தைத்திட நீங்கள்
விஜயம் செய்யவேண்டிய
இடம்

ராஜா
ரெயிலர்ஸ்
8, மொடல் மார்க்கற்,
யாழ்ப்பாணம்.
B. 359

## தீவுப்பகுதியில் கசிப்பு விற்பனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனவு என்பன தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடை செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதனையடுத்து தற்போது கசிப்பு உற்பத்தி, விற்பனவு என்பன தீவுப்பகுதிகளில் வெகுவாகக் குறைந்துள்ளன. கசிப்புத்தடையின் காரணமாகத் தற்போது பனம்கள்ளிற்கு மவுசு ஏற்பட்டுள்ளது. முன்பெல்லாம் கள்ளுத் தவறணைகளின் பக்கம் தலைவைத்துப் பார்க்காத மதுப் பிரியர்கள் இப்போது தவறணைப்பக்கம் வர ஆரம்பித்துள்ளனர்.

முன்னரெல்லாம் விற்பனையாகாத கள்ளுகள் நிலத்தில் ஊற்றப்பட்டன. தற்போது இந்த நிலை மாறத்தொடங்கிவிட்டது. மேலும் கசிப்பு அருந்திவிட்டு, அட்டகாசம் செய்வதும் தற்போது நின்றுவிட்டது. (15)

## பூச்சி மருந்துக்கு தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசலையில்சிறு பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பூச்சி மருந்துக்கு கடந்த பல வாரங்களாக தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் தாய் மார் இம்மருந்தை பெறுவதற்கு தனியார் வைத்திய சாலைகளை நாடுகிறார்கள். (22)

## கக்கடதீவு அந்தோனியார் ஆலய உற்சவம்

(விசேட நிருபர்)

கக்கடதீவு, புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

25 - ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலி நெடுந்தீவு பங்குத் தந்தை வண. பிதா, அமிர்தகுமார அடிகளால் ஒப்புக் கொள்ளப்படும். காலை 8.30 மணிக்கு திருச்சொருப பவனி இடம்பெறும்.

குருநகர், நெடுந்தீவு, மண்டைதீவு பகுதிகளால் செல்லும் யாத்திரீகர்களுக்கு அவ்வப்பகுதி மக்களால் போக்குவரத்து குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படும். திருநாட் பூசையை அடுத்து கக்கடதீவு கடற்றொழிலாளர்களால் விருந்து வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

## வவுனியாவிலிருந்து நெடுங்கேணி முத்தையன்கட்டு பகுதிகளுக்குப் புதிய பஸ்சேவை

(வவுனியா)

வவுனியா பஸ் டிப்போ புதிய பஸ் சேவைகளை நடாத்தத் தொடங்கியுள்ளது. நெடுங்கேணி மருதோடையிலிருந்து காலை 5-30 பகல் 12-30 ஆகிய நேரங்களில் வவுனியாவிற்கு பஸ் புறப்படும்.

வவுனியாவிலிருந்து காலை 9-30, மாலை 5-30 ஆகிய நேரங்களில் மருதோடை நோக்கி பஸ் சேவை நடாத்தப்படும்.

இதேபோல் காலை 7-30 பி. ப. 1-30 ஆகிய நேரங்களில் முத்தையன்கட்டிலிருந்து வவுனியாவுக்கு பஸ் சேவை நடாத்தப்படும். காலை 10.30 பி, ப. 4-30 ஆகிய இரண்டு நேரங்களிலும் வவுனியாவிலிருந்து முத்தையன்கட்டுக்கு பஸ் சேவை நடாத்தப்படும். இச் சேவைகள் யாவும் நெடுங்கேணிமார்க்கமாகவும் நடைபெறும்.

நெடுங்கேணி தோட்ட உதவியாளர் திரு. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற கோட்ட மீளாய்வுக் கூட்டத்தில் இந்தகவல் தெரிவிக்கப்பட்டது. (21)

## வவுனியாவில் உண்ணாவிரதம்

(வவுனியா)

இரு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து தன் உயிரைத் தியாகம் செய்த அன்னை பூபதியின் நினைவாக வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் சுழற்சி முறையிலான உண்ணா விரதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்.

வித்தியாலய முன்றலில் அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டு, மேற்படி உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

எமது வாடிக்கையாளர்களுக்கு இப்புது வருடப்பிறப்பிலே நல்ல ஆயுளையும் நோய்களின்றியும்வாழ நல்லூர்க்கந்தன் அருள்புரிவாராக!!

ஸ்ரீ சுகந்தி
கட்டிடப் பொருட்கள் விற்பனையாளர்கள்
383, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கொங்கிறிட் கற்கள், கிறீல் கற்கள், மணல் சல்லி, சீமேந்து பூச்சாடிகள் முதலியன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(கட்டிட ஒப்பந்தக்காரர்)
உரிமையாளர்
S. சாந்தலிங்கம்
B/361

புது வருடமே
தமிழ் மக்கள்
நலத்துடன் வாழ
கந்தன்
அருள்புரிவாராக!

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

8, மொடல் மார்க்கற்,
யாழ்ப்பாணம்.
B. 359

இப்போது தவறணைப்பக்கம் வர ஆரம்பித்துள்ளனர்.

முன்னரெல்லாம் விற்பனையாகாத கள்ளுகள் நிலத்தில் ஊற்றப்பட்டன. தற்போது

டையிலிருந்து காலை 5-30 பகல் 12-30 ஆகிய நேரங்

## வவுனியாவில் உண்ணாவிரதம்

(வவுனியா)

இரு கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதமிருந்து தன் உயிரைத் தியாகம் செய்த அன்னை பூபதியின் நினைவாக வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் சுழற்சி முறையிலான உண்ணா விரதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்.

வித்தியாலய முன்றலில் அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டு, மேற்படி உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

நேரங்களில் ... நோக்கி பஸ் சேவை நடாத்தப்படும்.

இதேபோல் காலை 7-30 பி. ப. 1-30 ஆகிய நேரங்களில் முத்தையன்கட்டிலிருந்து வவுனியாவுக்கு பஸ் சேவை நடாத்தப்படும். காலை 10.30 பி, ப. 4-30 ஆகிய இரண்டு நேரங்களிலும் வவுனியாவிலிருந்து முத்தையன்கட்டுக்கு பஸ் சேவை நடாத்தப்படும். இச் சேவைகள் யாவும் நெடுங்கேணிமார்க்கமாகவும் நடைபெறும்.

நெடுங்கேணி தோட்ட உதவியாளர் திரு. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற கோட்ட மீளாய்வுக் கூட்டத்தில் இந்தகவல் தெரிவிக்கப்பட்டது. (1)

அமிர்தகுமார அடிகளால் ஒப்புக் கொள்ளப்படும். காலை 8.30 மணிக்கு திருச்சொரூப பவனி இடம்பெறும்.

குருநகர், நெடுந்தீவு, மண்டைதீவு பகுதிகளால் செல்லும் யாத்திரீகர்களுக்கு அவ்வப்பகுதி மக்களால் போக்குவரத்து குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படும். திருநாட் பூசையை அடுத்து கச்சதீவு கடற்றொழிலாளர்களால் விருந்து வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (21)


கொங்கிறிட் கற்கள், கிறீல் கற்கள், மணல் சல்லி, சீமேந்து பூச்சாடிகள் முதலியன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(கட்டிட ஒப்பந்தக்காரர்)
உரிமையாளர்
S. சாந்தலிங்கம்
B/361


## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை சின்னக்கோபு

(செ. ஸ்ரீதரன் வல்வை.)

அன்னை மடியில் 02-09-1966 — தமிழீழ மண்ணில் 06-04-1986

திதி 24-03-1990

நெஞ்சம் மறக்கவில்லை
எங்கள் நெஞ்சம் மறக்கவில்லை - காலனும்
அஞ்சும் உங்கள் மாவீரம் தனை
எங்கள் நெஞ்சம் மறக்கவில்லை.

காலனும் கலங்கிட காவியம் ஆனவன்
காலத்தை வென்று நெஞ்சில் ஓவியமானவன்
கோல உடை கொண்ட காவலன்
தலைமகன் எங்கள் வீரத்தமிழ் மகன் நீ

வானம் இடிந்திட இலட்சியம் முழங்கிட
எங்கள் செல்வம் மாவீர மாணிக்கம்
தமிழ் மானம் காக்க இன்னுயிர் ஈந்து
இலட்சிய உள்ளங்களில் நிறைந்து நிற்பவன் நீ

மண் மீட்கும் களத்தில் உன் காலடிகள்
தமிழ் மறவர் உள்ளத்தில் இலட்சியத்தின் உயிரடிகள்
கண்போல் காத்திடும் உன் நினைவுகளில்
கண்டிடுவோம் வென்றிடுவோம் தங்கத் தமிழீழம்.

பெற்றோர்,
சகோதரர்கள்
உறவினர்கள்

கே. கே. எஸ். றோட்
வல்வெட்டித்துறை.

B/144


எமது வாடிக்கையாளர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!!

எம்மிடம்

கால்நடை உணவுப் பொருட்கள்,
பிறிமா, கோழித்தீன் வகைகள்,
மற்றும் பலசரக்குச் சாமான்கள்
மலிவு விலையில் கிடைக்கும்!

வேலவன் ஸ்ரோர்ஸ்

கல்வியங்காடு. B/365



புது வருடமே
தமிழ் மக்கள்
நலத்துடன் வாழ
கந்தன்
அருள்புரிவாராக!

கொண்டக்டர்: மச்சான் டிரைவர் பஸ்ஸை சசி கூல்பாருக்கு பக்கத்தில் நிற்பாட்டு.

டிரைவர்: ஓம் மச்சான், நல்ல உபசரிப்பு! சுகாதார முறையில் உணவு வகைகள், நீ சொன்னாலும் சொல்லாவிடினும் பஸ்ஸை அங்கேதான் நிற்பாட்டப் போறேன், ஆ!

சுகாதார முறையில் துப்புரவான கோப்பி, தேனீர், கூல் சோடா, பற்றிஸ், கட்லற், மட்டன்றோல் முதலியவற்றிற்கு

சசி கூல் பார்

கல்வியங்காடு B364



## அதிர்ஷ்டலாபச் சீட்டு

மேற்குறிப்பிட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்குரிய அதிர்ஷ்ட ரிக்கட்டுக்கள் இவ்விடம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

ரூபா 10.

1 ஆம் பரிசு அழகிய ஒக்ஸ்போர்ட் மோட்டார் வண்டி
2ஆம் பரிசு கொண்டர் லங்சர் (90) மோட்டார் சைக்கிள்
3ஆம் பரிசு புதிய சாலி மோட்டார் சைக்கிள்
மேலும் 10 ஆறுதல் பரிசுகளாக மேல்நாட்டு சாறிகளும் வழங்கப்படும்.

சீட்டிழுப்பு 09-05-1990 புதன்கிழமை மாலை 5-30 மணியளவில் யாழ். நாயன்மார்கட்டு இராமநாதன் வீதி, ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவுள்ளது.

EUROPE CHINA HOTEL

89, 2ND CROSS STREET; JAFFNA. B/383


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தெய்வேந்திரன் செல்வச் சந்திரன்
(அல்போன்ஸ்)

தாயின் மடியில் 11. 3. 1964 — மண்ணின் விடிவிற்காய் 24. 07. 1987

தமிழீழத் தாயகத்தின்
தவக் கொழுந்தே
உன் மரணம்
இந்த மண்ணில்
விழுதுகளாய் இறங்கி வர
விடுதலை விருட்சம்
வேகமாய் வளர்கிறது
உன் பாதையில்
உன் உறுதியில்
எங்கள் பயணம்
தொடர்ந்தே செல்லும்
வேங்கைகள் உறுதி
சோர்வதும் இல்லை
சுதந்திரப் போரில்
தோல்வியும் இல்லை.

பெற்றோர்கள்
உறவினர்
நண்பர்கள்

B/164

சிந்தனைக்கு

பொங்கு தமிழர்க்கு இன்னல் விழைத்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு.

- பாரதிதாசன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 24 - 03 - 90

# கடதாசிப் புலிகளல்ல வீரப்புலிகள்தான்!

அமைதிப்படை என்ற பெயரில் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஈழமண்ணில் இந்திய இராணுவம் கால் வைத்தது.

அமைதிப்படை ஆக்கிரமிப்புப் படையாக மாறி பின்னர் அட்டூழியப்படையாக உருவெடுத்தது.

ஈழத்தமிழ் மக்களுக்காக அவர்களின் சம்மதம் இல்லாமலேயே ராஜீவும் ஜே. ஆரும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தப்படி ஈழத்திலிருந்த போராளிக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதை முதல் வேலையாகச் செய்ய வேண்டும் என்று ஜே. ஆர். ஜெயவர்த்தனா பணித்தார்.

இந்திய இராணுவம் போராளிக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு முன்னர் ஈழத்திலிருந்து தப்பியோடி தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த சில குழுக்களைத் தங்கள் பாதுகாப்புடன் கூட்டி வந்தனர்; அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கினர்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் இருக்கிறோம் என்ற துணிவில் அந்தக் குழுவினரும் அட்டகாசமாக நடந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும் அதேசமயம் மற்றக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி அவர்களுக்குப் பாதுகாப்புமளித்துப் புலிகளை அழிக்க வேண்டும்.

இதுவே டில்லி தர்பாரும் இந்திய இராணுவமும் பின்பற்றிய நடைமுறைத்திட்டம்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தமிழ் பேசும் மக்களைத் திசை திருப்ப வேண்டும்.

நேசக்கரம், அன்புவழி, வெற்றிமாலை என்று இந்திய வானொலி பல நிகழ்ச்சிகளைத் தயாரித்துப் புளுகித் தள்ளியது.

# பீரங்கியைத் தொடர்ந்து நீர்மூழ்கி.....

பிப்ரவரி மாதம் 1979 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாய் தலைமையில் மத்தியஅமைச்சரவையின் அரசியல் விவகாரக்குழு கூடியது சர்வதேச ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு அதிகாரம் கொண்ட தலைமை அமைப்பு அது. ஒரு நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து மற்றொரு நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கும், 350 மீட்டர் ஆழத்திற்குச் செல்லும் சக்தி கொண்ட நீர்மூழ்கிக் கப்பலை இந்தியக் கப்பற்படைக்காக வாங்குவதற்குஅந்தக்குழு அப்போது ஒப்புதல் அளித்தது.

அதேமாதத்தில் பேரம்பேசுவதற்காகப் பாதுகாப்புக் கூடுதல் செயலர் எம். கே. முகர்ஜி தலைமையில் அமைக்கப்பட்ட உறுப்பினர் கமிட்டி நமக்கு விலை மற்றும்விவரங்கள்சமர்ப்பித்துள்ள நிறுவனங்களிலிருந்து நான்கைத் தேர்ந்தெடுத்தது. ஸ்வீடன் நிறுவனத்தின் கோகூம்ஸ், மேற்கு ஜேர்மனியின் ஹெச். டி. டபிள்யூ. இத்தாலிய நிறுவனத்தின் சாரோ மற்றும் டி.என்.எஸ்.டபிள்யூ. 1400 ஆகியவை அவை. அமைச்சரவை அனுமதி அளித்ததை தொடர்ந்து கப்பற்படைத் துணைத்தளபதி, ஆறு உறுப்பினர்கள் கொண்டஒரு நிபுணர் குழுவை, ரியர் அட்மிரல் எஸ். எல். சேத்தி தலைமையில் அமைத்தார்.



மே 16ஆம் தேதியன்று, கப்பற்படை துணைத் தளபதியிடம் சேத்தி கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அது ஸ்வீடனின் தயாரிப்பான 45 கோகூப்ஸ் நீர்மூழ்கிக் கப்பலுக்கு முதலிடம் தந்திருந்தது இரண்டாவது இடம் இத்தாலியின் காதோ நீர்மூழ்கிக் கப்பலுக்கு. இந்தக் கமிட்டியால் அந்த நேரத்தில் மேற்கு ஜேர்மனியின் ஹெச். டி. டபிள்யூ. நிராகரிக்கப்பட்டது. தேவையான 350 மீட்டர் ஆழத்திற்கு செல்வதற்குப் பதில 250 மீட்டர் ஆழமே இந்த நீர்மூழ்கிக் கப்பலில் செல்ல முடியும என்பதே இதற்குக் காரணம்.

ஆனால் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்குள்ளாகவே ஜூன் 15 ஆம் தேதியன்று, ஹெச். டி. டபிள்யூ-வும் பரிசீலனைக்குத் தகுதியுடையதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதிக ஆழம் செல்லக்கூடிய விதத்தில் தன்னை அது மேம்படுத்திக் கொண்டால் அதனையும் கருத்தில்கொள்ளலாம் என்ற நிபந்தனையுடன் ஹெச், டி. டபிள்யூ-வைத் தனது பட்டியலில் கமிட்டி சேர்த்தது.

ஏப்ரல் 14 ஆம் தேதி பழைய கமிட்டி இறுதியாகக் கூடியபோது அதற்குப் பாதுகாப்புத் துறைச் செயலர் தலைமை தாங்கவில்லை. அதற்குப் பதிலாகப் பாதுகாப்பு அமைச்சகத்தில் கூடுதல் செயலராகச் சேர்ந்திருந்த எஸ். எஸ். சித்து தலைமையில் கூட்டம் நடந்தது. இந்த மாற்றத்திற்கான எழுத்து மூலமான எந்த வித உத்தரவும் பிரதமர் அலுவலகத்திலிருந்து அளிக்கப்படவில்லை. சித்து இந்தப் பொறுப்பை எப்படி ஏற்றுக் கொண்டார் என்பதற்கான அதிகார பூர்வமான சாட்சியங்களும் இல்லை.

கூட்டத்திற்கு சித்து சாதாரணமாக வந்து, தனது தலைமையில் 7 உறுப்பினர் கொண்ட பேரம்பேசும் கமிட்டியை அமைக்க அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டி முடிவு செய்துள்ளது என்று அறிவித்தார். இதிலும் சித்துவின் வார்த்தைகளைத் தவிர, இந்த முடிவை எடுத்



என்று ஒப்பந்தம் வலியுறுத்தியது. மேலும் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் பின்னர் ஆர்டர் செய்யப்படும் என்றும் ஒப்பந்தம் கூறியது.

ஆனால் 1987 மத்தியில் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் மட்டுமே சப்ளை செய்யப்பட்டன. இதற்குள் ராஜீவ் அமைச்சரவையில் வி. பி. சிங் பாதுகாப்பு அமைச்சராகிவிட்டார். ஜெர்மன் நிறுவனம் இந்தியாவிற்கு அதிக விலை நிர்ணயிக்கலாம் என்ற தகவல் வி. பி. சிங்கிற்குக் கிடைத்தது. உடனே அவர் விலையைப்பற்றி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி மீதி சப்ளை செய்ய வேண்டிய இரண்டு நீர்முழ்கிக் கப்பல்க

## ராஜீவைத் துரத்தும் ஊழல் மோசடிகள்

இந்த நேரத்தில் இந்திய அரசியலில் ஒரு மாற்றம் நேர்ந்தது. மொரார்ஜி தேசாய் அரசு கவிழ்ந்தது. சரண்சிங் நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றார். இதன் காரணமாக, மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டியும் மாறியது.

ஆனால், அதற்குள் பாதுகாப்பு அமைச்சகம் விலையுயர்ந்த ஹெச் டி. டபிள்யூவிற்குப் பதிலாக, இருப்பவற்றுள் சிறந்ததான கோகூம்ஸ்களை 318 கோடி ரூபாய்க்கு வாங்கலாம் என்று அமைச்சரவையின் அரசியல் கமிட்டிக்கு ஒரு நகல் தயாரித்துவிட்டது. ஆனால், அன்றைய அரசியலில் நிலவிய நிச்சயமற்ற தன்மையால், அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டிக் கூட்டம் நடைபெறவில்லை.

1980இன் துவக்கத்தில், ஒரு வழியாக இந்தக் கமிட்டி கூடியபோது, கூட்டத்திற்கு மீண்டும் ஆட்சிக்கு வந்த திருமதி இந்திராகாந்தி தலைமை வகித்தார்.

துக் காட்டுவதற்கு அரசு ஃபைல்களில் குறிப்பு எதுவும் இல்லை.

இந்த இடத்திலிருந்து தான் நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

1980 ஆம் வருடம் மே மாதத்தில், சித்து கமிட்டி, ஜெர்மனி மற்றும் ஸ்வீடனிற்குப் பயணம் மேற்கொண்டது. 1980 மே 17-ம் தேதி கமிட்டி சம்பிரதாயமாகக் கூடி, திடீரென்று கோகூம்சிலிருந்து ஹெச். டி. டபிள்யூவிற்குத் தாவியது. ஹெச்.டி. டபிள்யூ விலை 322 கோடி ரூபாய் என்றும், கோகூப்ஸ் விலை 403 கோடி ரூபாயாகிவிட்டது என்றும் மதிப்பிடப்பட்டது

1980-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி, அதாவது சஞ்சய் காந்தி இறந்த ஒரு வாரத்திற்குப் பிறகு. மத்திய. அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டி ஹெச்.டி. டபிள்யூவிற்கு ஆர்டர் அனுப்புமாறு சொன்ன சித்துவின்

ளின் விலையையும் குறைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்,

அப்போதுதான், முதல் குற்றச்சாட்டு வெடித்தது. 1987 பிப்ரவரி 24ஆம் தேதி, ஜெர்மனியில் உள்ள இந்திய தூதர் ஜே. சி. அஸ்மனி

## பிரபு சவ்லா

இந்திய அரசுக்கு ரகசியத் தந்தி அனுப்பினார். ஜெர்மனியர்கள் விலையைக் குறைக்க விரும்பவில்லை. ஏனெனில் இந்த ஒப்பந்தம் பெறுவதற்காகக் கொடுக்கப்பட்ட 7 சதவீதக் மிஷனும் அதில் அடங்கியுள்ளது என்றது தந்தி,

இந்தத் தகவலை முதலில் சிங் 1987 ஏப்ரலில்பார்த்தார் உடனே விசாரணைக்கு உத்தரவிட்டார். விசாரணைக்கு சிங் உத்தரவிட்ட மூன்று நாட்களுக்குப் பிறகு, ஏப்ரல் 12ஆம் திகதி அவர் பதவியை ராஜினாமா செய்தார்.

நன்றி
இந்தியன் டுடே.

# மாணவர்கள் நற்பிரஜையாக ஆசிரியர் பாடுபடவேண்டும்

(தீவுப்பகுதி)

பாடசாலைகள் வெறுமனே கல்வியை மட்டும் புகட்டாமல் உடல், உள ரீதியாக வளரக்கூடிய கலை, கலாசார நிகழ்ச்சிகள், சாரணீயம் உடற் பயிற்சிகள் போன்றவற்றை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பல துறைகளிலும் முழுமையான வளர்ச்சியடைந்த மாணவனே சிறந்த பிரஜையாக உருவாக முடியும். இதனை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியரையே சாரும்.

எமது சமுதாயத்தின் தேவைக்கு ஏற்றவாறு மாணவர்கள் உருவாக்கப்படவேண்டும். எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், எமது மண்ணையும்

அலுவலக பிரதம கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் உரையாற்றுகையில் தீவுப்பகுதி பாடசாலை மாணவர்கள் கல்வித் தரத்திலும், விளையாட்டுத் துறைகளிலும் குறைந்தவர்கள் அல்ல. இப்பாட சாலையிலிருந்து மூன்று மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமை பாராட்டக் கூடியது என்றார். வேறு சிலரும் உரைநிகழ்த்தினர்.

## மண்டபங்களில் கால்நடைகள் தங்குகின்றன

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஆலடிச்சந்திக்கு

தப்பமோடி தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த சில குழுக்களைத் தங்கள் பாதுகாப்புடன் கூட்டி வந்தனர்; அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கினர்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் இருக்கிறோம் என்ற துணிவில் அந்தக் குழுவினரும் அட்டகாசமாக நடந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும் அதேசமயம் மற்றக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி அவர்களுக்குப் பாதுகாப்புமளித்துப் புலிகளை அழிக்க வேண்டும்.

இதுவே டில்லி தர்பாரும் இந்திய இராணுவமும் பின்பற்றிய நடைமுறைத்திட்டம்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தமிழ் பேசும் மக்களைத் திசை திருப்ப வேண்டும்.

நேசக்கரம், அன்புவழி, வெற்றிமாலை என்று இந்திய வானொலி பல நிகழ்ச்சிகளைத் தயாரித்துப் புளுகித் தள்ளியது.

தமிழ் நாட்டில் சோவின் துக்ளக், குமுதம் போன்ற பத்திரிகைகளும் ஜே. ஆருக்கும் ராஜீவுக்கும் துதி பாடி தமிழ்மக்களைத் தவறான வழிக்குத் திருப்பப் பாடுபட்டன.

காங்கிரஸ்காரர்களும் அண்ணா தி மு. கழகத்தினரும் இவர்களுக்காக ஒத்தூதினர்.

பாவம் முதியவர் ம. பொ. சி. கூட சும்மா இருக்கவில்லை. இந்திய வானொலி மூலம் போதனை செய்தார்.

உலகின் நான்காவது பெரிய படை என்று பெயர் பெற்ற இந்திய இராணுவம் ஈழத்தமிழ் மக்களைச் சித்திரவதை செய்தது. புலிகளை அழிக்கிறோம் என்று கூறி அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்தது.

ஆனால் இந்திய - பாகிஸ்தான் போரிலும் இந்திய - சீன எல்லைப் போரிலும் ஏற்பட்ட இழப்புக்களை விட விடுதலைப்புலிகளிடம் பெரிய இழப்பையே இந்திய இராணுவம் சந்தித்தது.

விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பைவிட இரண்டு மூன்று மடங்கு இந்திய இராணுவம் இழந்தது.

இன்று இந்திய இராணுவத்தின் கடைசி அணியும் திருக்கோணமலையிலிருந்து பயணமாகிறது.

போய்ச் சேருங்கள். உங்கள் நடத்தையால் ஈழத் தமிழ் மக்களுக்கு இழப்பேற்பட்டிருக்கலாம். ஆனால் டில்லி இராணுவ ரீதியிலும் இராஜ தந்திர ரீதியிலும் தார்மீக ரீதியிலும் ஈழத்தில் விடுதலைப்புலிகளிடம் பெருந்தோல்வியைக் கண்டிருக்கிறது.

போய்ச்சேரும்போது வழியில் சென்னைப்பட்டினத்தில் நேசக்கரம், அன்புவழி, வெற்றிமாலைக்காரர்களைப் பார்த்து ''போதும் போதும் உங்கள் புளுகை நிறுத்துங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போங்கள்.

அத்தோடு 'துக்ளக்' சோவுக்கும் வாழப்பாடியாருக்கும் முதியவர் ம. பொ. சிக்கும் அப்படியே ஜெயகாந்தனுக்கும் ஈழத்தில் கடதாசிப் புலிகள் இல்லை. சுத்தமான வீரப்புலிகள்தான் இருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டுப் போய்ச்சேருங்கள்!

# ஆசிரியர் பாடுபடவேண்டும்

(தீவுப்பகுதி)

பாடசாலைகள் வெறுமனே கல்வியை மட்டும் புகட்டாமல் உடல், உள ரீதியாக வளரக்கூடிய கலை, கலாசார நிகழ்ச்சிகள். சாரணீயம் உடற் பயிற்சிகள் போன்றவற்றை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பல துறைகளிலும் முழுமையான வளர்ச்சியடைந்த மாணவனே சிறந்த பிரஜையாக உருவாக முடியும். இதனை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியரையே சாரும்.

எமது சமுதாயத்தின் தேவைக்கு ஏற்றவாறு மாணவர்கள் உருவாக்கப்படவேண்டும். எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், எமது மண்ணையும் தாயகத்தையும் காக்கக்கூடிய உறுதிமிக்கவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரிய சமுதாயத்தையே சார்ந்தது.

நாட்டில் ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையிலும் இப் பாடசாலையில் மூன்று மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமை பாராட்டக்கூடிய ஒன்று.

மேற்கண்டவாறு வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற எழுச்சி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ குறிப்பிட்டார்,

வேலணை கொத்தணிப் பிரிவில் இப்பாடசாலை முன்னோடிப் பாடசாலையாக கல்விப் பகுதியினரால் தெரிவு செய்யப்பட்டமைக்கு தெரிவிக்குமுகமாக இவ் விழா நடைபெற்றது.

அதிபர் திரு. பொ. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அதிபர் தனது தலைமை உரையில், இப் பாடசாலையின் வளர்ச்சியே எனது குறிக்கோள். இப் பாடசாலை முன்னோடிப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டமை எமது வேலணைப் பகுதிக்கு ஒரு நற்செயலாகும் என்றார்.

வேலணை கோட்டக்கல்வி அலுவலக பிரதம கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் உரையாற்றுகையில் தீவுப்பகுதி பாடசாலை மாணவர்கள் கல்வித் தரத்திலும், விளையாட்டுத் துறைகளிலும் குறைந்தவர்கள் அல்ல. இப் பாடசாலையிலிருந்து மூன்று மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமை பாராட்டக் கூடியது என்றார். வேறு சிலரும் உரைநிகழ்த்தினர்.

## மண்டபங்களில் கால்நடைகள் தங்குகின்றன

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஆலடிச்சந்திக்கு அருகாமையில் உள்ள கிழக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க மண்டபமும் அதனருகில் உள்ள நசவுசாலையும் எவ்வித பயன்பாடும் இல்லாமல் கால்நடைகளின் உறைவிடமாகவே காட்சியளிக்கின்றது.

இக்கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இப்பகுதியில் உள்ள சிறார்களுக்காக நடாத்தப்பட்டு வந்த பாலர் பாடசாலையும் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக நடாத்தப்படவில்லை. அத்துடன் இவ்விரு மண்டபங்களிலும் காணப்பட்ட தளபாடங்களும் ஒவ்வொன்றாக குறைந்து வருகின்றன. (22)

## தீவுப்பகுதியில் அன்னைபூபதி நினைவு

(தீவுப்பகுதி)

உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதிகணபதிப்பிள்ளையின் இரண்டாம் வருட நினைவுதின கொண்டாட்டங்கள் தீவுப்பகுதி எங்கும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

அன்னையின் நினைவாக வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு, மண்டைதீவு, ஊர்காவற்றுறை காரைநகர்ஆகிய இடங்களில் அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. 15

அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டியும் மாறியது.

ஆனால், அதற்குள் பாதுகாப்பு அமைச்சகம் விலையுயர்ந்த ஹெச். டி. டபிள்யூவிற்குப் பதிலாக, இருப்பவற்றுள் சிறந்ததான கோகூம்ஸ்களை 318 கோடி ரூபாய்க்கு வாங்கலாம் என்று அமைச்சரவையின் அரசியல் கமிட்டிக்கு ஒரு நகல் தயாரித்துவிட்டது. ஆனால், அன்றைய அரசியலில் நிலவிய நிச்சயமற்ற தன்மையால், அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டிக் கூட்டம் நடைபெறவில்லை.

1980இன் துவக்கத்தில், ஒரு வழியாக இந்தக் கமிட்டி கூடியபோது, கூட்டத்திற்கு மீண்டும் ஆட்சிக்கு வந்த திருமதி இந்திரா காந்தி தலைமை வகித்தார்.

பாதுகாப்பு அமைச்சகமும் தங்கள் தேர்வை வரிசைப் படுத்திப் போட்டிருந்த பட்டியலைப் புதிய அரசிடம் சமர்ப்பித்தன. அதில் கோகூப்ஸ் மற்றும் ஹெச். டி. டபிள்யூ. இரண்டின் பெயர்களும் இருந்தன.

1980 ஆம் வருடம் மே மாதத்தில், சித்து கமிட்டி, ஜெர்மனி மற்றும் ஸ்வீடனிற்குப் பயணம் மேற்கொண்டது. 1980 மே 17-ம் தேதி கமிட்டி சம்பிரதாயமாகக் கூடி, திடீரென்று கோகூம்சிலிருந்து ஹெச். டி. டபிள்யூவிற்குத் தாவியது. ஹெச். டி. டபிள்யூ விலை 322 கோடி ரூபாய் என்றும், கோகூப்ஸ் விலை 403 கோடி ரூபாயாகிவிட்டது என்றும் மதிப்பிடப்பட்டது

1980-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி, அதாவது சஞ்சய் காந்தி இறந்த ஒரு வாரத்திற்குப் பிறகு. மத்திய. அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டி ஹெச். டி. டபிள்யூவிற்கு ஆர்டர் அனுப்புமாறு சொன்ன சித்துவின் பரிந்துரைக்கு ஒப்புதல் அளித்தது.

நான்கு ஹெச். டி. டபிள்யூ நீர்மூழ்கிக் கப்பல்கள், ஏவுகணைகள் எல்லாமகச் சேர்த்து மொத்த விலை ரூ- 465 கோடி, ஆறு ஆண்டுகளுக்குள் 1987 இறுதிக்குள் சப்ளை செய்யப்படவேண்டும்

தாதா ஜெ. சி. அஸ்மனி

## பிரபு சவ்லா

இந்திய அரசுக்கு ரகசியத் தந்தி அனுப்பினார். ஜெர்மனியர்கள் விலையைக் குறைக்க விரும்பவில்லை. ஏனெனில் இந்த ஒப்பந்தம் பெறுவதற்காகக் கொடுக்கப்பட்ட 7 சதவீதக் மிஷனும் அதில் அடங்கியுள்ளது என்றது தந்தி,

இந்தத் தகவலை முதலில் சிங் 1987 ஏப்ரலில்பார்த்தார் உடனே விசாரணைக்கு உத்தரவிட்டார். விசாரணைக்கு சிங் உத்தரவிட்ட மூன்று நாட்களுக்குப் பிறகு, ஏப்ரல் 12ஆம் திகதி அவர் பதவியை ராஜினாமா செய்தார்.

நன்றி

**இந்தியன் ருடே.**

## மின் தடை ஏற்படலாம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இருளில் மூழ்கலாம்! வட்டுக்கோட்டை மாவட்ட அபிவிருத்திசபை அலுவலகத்திற்கு மின்சார சபையிடம் இருந்து இறுதி அறிவித்தல் கிடைத்துள்ளது. பாவனையாளர்கள் மின்கட்டண நிலுவை மற்றும் களவாக மின்சாரப் பாவனைகளால் வட்டுக்கோட்டை பகுதி மின்சாரம் துண்டிக்கப்படலாம் என அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கூறினார். (17

## நெடுந்தீவு துறைமுகம் ஆழமாக்குதல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு துறைமுகக் கடற்பகுதிஆழமாக்கப்படும்வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

நெடுந்தீவு, குறிக்கட்டுவான் படகுச்சேவைக்குப் புதிதாக ஈடுபடுத்தப்படவுள்ள மோட்டார் படகினைத் துறைமுகத்தில் நிறுத்தி வைப்பதற்குத் தற்பொழுது ஆழம் போதாது எனத் தெரிவிக்கப்படுகிறது. துறைமுகக் கடற்பகுதியை ஆழமாக்கும் வேலைகளின் அவசியத்தைப் பெருந்தெருக்கள் அதிகாரசபையின் உயர் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் துறைமுகத்தைப் பார்வையிட்டுஎடுத்துக்கூறினர். துறைமுகத்தை ஆழமாக்கும் வேலைகளுக்குப் பொது மக்களும், பொது நிறுவனங்களும் உதவி வழங்கத் தயாராகவுள்ளதாக உறுதி வழங்கினர். தீவுப்பகுதி விடுதலைப் புலிகள மக்கள் முன்னணியினரும் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக வாக் குறுதியளித்தனர்.

# ''கல்வி வீட்டில் ஆரம்பமாகிறது''

(கொழும்பு) -பிரேமதாஸா

ஆசிரியர், பெற்றோர்களுக்கு, வாரத்தில் இரண்டு மணித்தியாலம் பயிற்சி வழங்குவதன் மூலம் வீடுகளைப் பள்ளிகளாக்கும் காந்தியின் கருத்தை நடைமுறைப்படுத்தலாம். என்று ஜனாதிபதி பிரேமதாஸா கொழும்பில் புதனன்று தெரிவித்தார்.

கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரி 125 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் பேசும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

கல்வி முதலில் வீட்டில் ஆரம்பிக்கிறது. சமீப காலத்தின் அனர்த்தங்களின்போது பள்ளிக்கூடங்கள் எரிந்து, பிள்ளைகள் பாடசாலைக்குப் போக முடியாத நிலை ஏற்பட்ட சமயம் நல்ல பெற்றோர் பிள்ளைகளை வீட்டில வைத்தும் படிப்பித்துள்ளார்கள்.

# சாவகச்சேரி வர்த்தகர்கள் சிந்திக்க வேண்டும்

ஆசிரியர்
'ஈழநாதம்'

யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை, மன்னார், கிளிநொச்சி, காங்கேசன்துறை, தெல்லிப்பழை, கொழும்பு, கண்டி போன்ற பெரிய நகரங்களில் சனிக்கிழமையில் அரைநேரமாகவும் ஞாயிறு முழுநேரமாகவும் கடை மூடப்படுகின்றன. இது உலகம் முழுவதும் உள்ள நடைமுறையும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறையும் ஆகும். இதனைத் தெரிந்தும் சனிக்கிழமை சந்தை நாள் என்பதைக்காட்டி அரைநேரமாகக் கடை மூடுதற்கும் தொழிலாளர்களுக்கு சனி அரைநேரம் கொடுக்க மறுப்பதும் உலகத்தோடு ஒத்து வழக்க மறுப்பதைக் காட்டுகின்றன. யாழ்ப்பாணத்தில் பல இடத்தில் இருந்தும் பொருள்கள் வாங்க வருகிறார்கள் எனக்கூறி யாழ். வர்த்தகர்கள் சனி முழுநேரமும் கடை திறக்க வில்லையே. அரை நேரத்தில் கடைமூடி தொழிலாளர்களுக்கு சனி அரை நேரலீவும், ஞாயிறு முழு நாள் லீவும் வழங்குகிறார்கள் தானே. திங்கள் கடையை சாவகச்சேரியில் மூடுவதால் அரசு திணைக்களங்கள் சரியாக இயங்க முடியாதநிலை ஏற்படும். இதனால் பாதிப்படையப் போவது மக்கள் தான். இதனைக் கருத்திற் கொண்டு உலக நடைமுறையைப் பின்பற்றி நடப்பது சகலருக்கும் நல்லதாகும். ஓர் கிழமையை நல்லநாளில் ஆரம்பிப்பது நல்லதாகும். செவ்வாய் வெறுவாய் என்பது ஓர் முதுமொழி எனவே தொழில் நிலையங்களை திங்கள் மூடுவது நல்லதல்ல. எனவே அரச நடைமுறையும் உலக நடைமுறையையும் தென்மராட்சி வர்த்தகர் பின்பற்ற வேண்டும் என்பது பலரது விருப்பமாகும். அரச திணைக்களங்களான வங்கிகள், தபால் நிலையம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நகரசபை பாடசாலை ஊழியர்கள் திங்கள் கடைமூடுவதால் பலவித பாதிப்பை அடைவர். கடைகள் மூடப்பட்டுள்ளது என நொண்டிச்சாட்டை கூறி அலுவலக ஊழியர்கள் லீவு எடுத்துக் கொண்டு வீடு சென்றுவிடுவர். இதனால் மக்கள்தம் கடமைகளை நிறைவேற்ற முடியாது கஷ்டமடைய வேண்டிவரும். எனவே திங்கள் கடைமூடுவது நல்லதல்ல. சனி அரைநாளும் ஞாயிறு முழுவதும் கடை மூடுவதே நல்லதாகும்.

ம. ஆனந்தலிங்கம்
சாவகச்சேரி.

## மக்கள் மடல்

ஈழநாதம்

# " அரசுடன் பேசுவதால் உரிமைகளை விடோம் "

## வவுனியா கூட்டத்தில் மகேந்திரராசா

(வவுனியா)

**நீண்டகால யுத்தத்தினால் வேதனைக்குள்ளான மக்களுக்கு அரசியல் தீர்வின் மூலம் நிம்மதி பெற்றுக்கொடுக்க விரும்பினோம். இதற்காகவே அரசுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். என்பதற்காக எமது மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்க நாம் தயாராக இல்லை.**

இவ்வாறு வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் திறந்த வெளியரங்கில் கடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்படி முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாம் எந்த இலட்சியத்திற்காகப் போராடினோமோ அதிலிருந்து இன்னும் விலகிச் செல்லவில்லை.

இந்தியப் படையினரால், சடந்த இரண்டு வருட காலமாக நீங்கள் கொலைகளையும், கொள்ளைகளையும் சித்திரவதைகளையும் அனுபவித்து, தற்போது நிலவும் அமைதியான நிலையில் இங்கு வந்துள்ளீர்கள்.

மக்களின் துன்பங்களையும், வேதனைகளையும் கண்டு பொறுக்க முடியாமலேயே நாம் போராடமுன்வந்தோம்.

இன்று நிரந்தர அமைதிக்காக நாம் எடுத்துள்ள முயற்சிகளுக்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு தினேஷ் தமதுரையின் போது குறிப்பிட்டதாவது,

ஆரம்பத்தில் எமது அமைப்பின் கொள்கைகளை தனிநபர் கருத்தென்று சிறிலங்கா அரசு பிரச்சாரம் செய்தது.

தலைவர் பிரபாகரனின் வழி நடத்தலில் நாம் பலம் பொருந்திய அமைப்பாக மாறியுள்ளோம். எதிர்கால சுபீட்சத்திற்கும், அமைதிக்கும் மக்கள் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் திரு. யோகி பேசும் போது,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையே நடந்த யுத்தம் தவிர்க்க முடியாததொன்று.

எந்த இராணுவத்தை எதிர்த்து போரிட்டாலும், எந்த வல்லரசை எதிர்த்துப் போரிட்டாலும் மக்கள் பலமும் மனவலிமையும் இருக்கும் வரை எவரும் தோல்வி அடைய முடியாது என்பதை புலிகள் இன்று உலகத்திற்கு எடுத்துக் காட்டி விட்டார்கள்.

எமது போராட்டத்தின் மூலம் இந்தியாவிற்கு மட்டுமல்ல; உலகத்திற்கே ஒரு வீர வரலாறு காட்டி விட்டோம்.

17 வருட ஆயுதப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் எவற்றையும் விட்டுக் கொடுத்ததாக வரலாறு கிடையாது.

எமது ராஜதந்திரத்தின் பலனாக இந்தியா எம் மண்ணை விட்டுப்போகவேண்டிய நிலை வந்தது. எதிர்பார்த்ததற்கு மாறாக நாம் வளர்ந்து விட்டோம் என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன் தமதுரையின் போது,

சுயநல நோக்குடன் நாம் வேறு திசையில் செல்லவில்லை. இந்த மண்ணின் உண்மையான மைந்தர்கள் நாம். தமிழ்மக்களின் உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக வீரமுடன் போராடி வருகின்றோம்.

புலிகளாகிய நாம் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியாக அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சியுடன் உங்களைச் சந்திக்கின்றோம்.

எமக்கு உதவி செய்த காரணத்திற்காக மக்களில் பலர் கொல்லப்பட்டனர். சித்திரவதைக்குள்ளானார்கள். இன்று அராஜகம் செய்தவர்கள் அடிவேர் தெரியாமல் ஓடி விட்டனர் என்றார்.

கவிஞர் காசி ஆனந்தன் தமதுரையில், இந்திய அரசு அன்று எமக்கு அரிசி போட்டது வயிற்றுக்கல்ல; வாய்க்குத்தான்.

இன்று இங்கு வந்திருப்பவர்களின் பல வீடுகளில் பிள்ளைகள் இல்லை. சொத்துகள் இல்லை என்பதை அறிவேன். இவற்றைச் செய்த இந்திய அரசுடன் புலிகள் போராடினார்கள். வெற்றி பெற்றார்கள்.

அந்தக்கால இலக்கியங்களில் தாய் போராடப் போனாள். மகள் போராடப் போனாள் என்ற செய்தியை அறிகின்றோம். ஆனால், தமிழ்ப் பெண்களில் ஈழப் பெண்கள் மட்டுந்தான் துப்

பலவீனத்தைக்...

## வடமாகாண பெரிய கிரிக்கெட் போட்டி

# சென். ஜோன்ஸ் பலமான நிலையில்; சாதனையும் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமான யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்ட முடிவில் முதல் இனிங்சில் மத்திய கல்லூரி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. சென். ஜோன்ஸ் அணி நான்கு விக்கெட் இழப்பிற்கு 276 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.**

வட மாகாணத்தில் மிகப் பெரிய கிரிக்கெட் போட்டியான யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரியின் 87 -வது கிரிக்கெட் போட்டி நேற்றுக் காலை 9 30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் குதூகலமாக ஆரம்பமாகியது.

யாழ். மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இரு கல்லூரி வீரர்களையும், இரு கல்வி அதிபர்களையும், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களையும், பயிற்சியாளர்களையும் கல்விப் பணிப்பாளருக்கு அறிமுகம் செய்துவைத்தனர்.

யாழ். மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி மொத்தம் 156 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் எஸ். ஜெயசீலன் 50 ஓட்டங்களை மிகவும் சிறப்பாக விளையாடிப் பெற்றுள்ளார்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் அணித் தலைவர் மிகவும் சிறந்த முறையில் பந்து வீசி 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது

எக்ஸ். அஜித் லக்ஸ்மனும், பி. முரளியும் தலா 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மிகவும் சிறந்த முறையில் மின்னல் வேகத்தில் 4 விக்கட் நஷ்டத்திற்கு 276 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ் சுறேன்குமார் 135 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல்பெற்றுள்ளார். இவர் 18 பவுண்டரிகள் அடித்துள்ளார். அத்துடன் 1982-ஆம்ஆண்டு ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற ப. பிரகலாதனின் 125 ஓட்டங்களைப் பெற்ற சாதனையை எஸ். சுறேன்குமார் 135 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் ஓட்டங்களை மிகவும் சிறந்த முறையில் மின்னல் வேகத்தில் பெற்றுள்ளார்.

ப.முரளி 25 ஓட்டங்களையும், பிரசாந்தன் 57 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். சிறி சங்கர் 3 விக்கட்டுக்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது,

இப்போட்டிக்கு திரு. வேதாபரணமும், திரு செல்வராசாவும் மிகவும் திறம்பட மத்தியஸ்தம் வசித்தார்கள. (42)

## கடைகள் திருட்டு

(தீவுப்பகுதி)

நயினாதீவிலுள்ள கூட்டுறவுச் சங்க கிளை விற்பனவு நிலைய மொன்றும், தனியார் கடை யொன்றும் நேற்று முன்தினமிரவு உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளன. நள்ளிரவே இக்கடைகள் திருடர்களால் உடைக்கப்பட்டு திருடப்பட்டதாகவும் இத் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது (15)

## மாணவர்கள் புகையிரத சேவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் மாலை நேரவகுப்புக்கள் முடிந்த பின்பு வீடு செல்லுவதற்கு புகையிரத சேவை ஒன்றை எதிர்பார்ப்பதாகமத்தியபுகையிரத நிலையத்தலைவரிடம் முறையிட்டுள்ளனர்.

இரவு தபால் ரயில் கொக்குவில் புகையிரத நிலையத்தில் தரித்து நின்று செல்வதற்கு ஒழுங்குகள் செய்வதன் மூலம் இக்குறையை நிவர்த்தி செய்யலாம் என அவர்கள் தம்மிடம் கூறியதாக யாழ் மத்திய புகையிரத நிலைய தலைமை அதிகாரி திரு. மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (லோ)

## முகாமிற்குள் இருந்து எலும்புக் கூடுகள்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சந்தியில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாம் அகற்றப்பட்ட பின் அக் கட்டிடத்தின் முன்றலில் இருந்த கிடங்கு ஒன்றிலிருந்து ஐந்து பேரின் எலும்புகள் எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் விபரம் வருமாறு வீரசிங்கம் மகேஸ்வரி 53 யசோதா வீரசிங்கம் வயது இருபது மற்றும் ரத்தின கோபால் (செட்டியார்) ரேடியோ ஒன்றும் எவர் சில்வர் தட்டுகளும் மீட்கப்பட்டுள்ளது என கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர் ஒருவர் தெரிவிக்கிறார்.

மீட்டெடுக்கப்பட்டவர்களின் எலும்புகளுக்கு உரிய சமயக்கிரிகைகளை தாம் செய்துவிட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார். (லோ)

கிராமம்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ்.நகரில் லொறிகளை நிறுத்த இடம் ஒதுக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை அலுவலகத்துக்கு முன்பாக சுமார் ஐம்பது லொறிகள் நேற்று நிறுத்தப்பட்டு லொறி உரிமையாளர்கள் தமக்கு யாழ். நகரில் லொறிகளை நிறுத்துவதற்கு தகுந்தஇடம் தருமாறு ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வீதிப்போக்குவரத்து விதிகளால், லொறிகளை சஸ்தூரியார் வீதியில் நிறுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நேற்று இவர்கள் லொறிகளில் ஊர் வலமாகச் சென்று ஆணையாளரைச் சந்தித்தனர்.

புதிய போக்குவரத்து விதிகளால் தற்போது சத்திரச்சந்தியில் நிறுத்த அனுமதிவழங்கப்பட்டது ஆனால் இது தமக்கு வசதியீனங்களை ஏற்படுத்துவதாக ஆணையாளரிடம் தெரிவித்தனர்.

ஸ்ரான்லி வீதிக்கு அண்மையில் ஒரு இடம் ஒதுக்கித்தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (லோ)

மட்டக்களப்பின்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடு காரணமாக துண்டிக்கப் பட்ட தொலைபேசி இணைப்

## வீதியைத் திருத்த நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித் துறையிலுள்ள கிராமக்கோடு- வராத்துப்பளை வீதி திருத்திப் புனரமைக்கப் படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

இவ்வீதியைத் திருத்திப் புனரமைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வராத்துப்பளை சனசமூக நிலையம் இலங்கை வீதிகள் அபிவிருத்தி அதிகார சபைத்தலைவரை அவசரமாகக் கேட்டிருந்ததும் குறிப்பிடத் தக்கது (25)

சுகாதாரம் சம்பந்தமான

அமைதியான நிலையில் இங்கு வந்துள்ளீர்கள்.

மக்களின் துன்பங்களையும், வேதனைகளையும் கண்டு பொறுக்க முடியாமலேயே நாம் போராடமுன்வந்தோம்.

இன்று நிரந்தர அமைதிக்காக நாம் எடுத்துள்ள முயற்சிகளுக்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு தினேஷ் தமதுரையின் போது குறிப்பிட்டதாவது,

ஆரம்பத்தில் எமது அமைப்பின் சொள்கைகளை தனிநபர் கருத்தென்று சிறிலங்கா அரசு பிரச்சாரம் செய்தது. இன்று எமது அமைப்பை மக்களின் அமைப்பென்று அந்த அரசு ஏற்று விட்டது.

...வரை எவரும் தோல்வி அடைய முடியாது என்பதை புலிகள் இன்று உலகத்திற்கு எடுத்துக் காட்டி விட்டார்கள்.

எமது போராட்டத்தின் மூலம் இந்தியாவிற்கு மட்டுமல்ல; உலகத்திற்கே ஒரு வீர வரலாறு காட்டி விட்டோம்.

17 வருட ஆயுதப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் எவற்றையும் விட்டுக் கொடுத்ததாக வரலாறு கிடையாது.

எமது ராஜதந்திரத்தின் பலனாக இந்தியா எம் மண்ணை விட்டுப்போகவேண்டிய நிலை வந்தது. எதிர்பார்த்ததற்கு மாறாக நாம் வளர்ந்து விட்டோம் என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மக்...

அராஜகம் செய்தவர்கள் அடி வேர் தெரியாமல் ஓடி விட்டனர் என்றார்.

கவிஞர் காசி ஆனந்தன் தமதுரையில், இந்திய அரசு அன்று எமக்கு அரிசி போட்டது வயிற்றுக்கல்ல; வாய்க்குத்தான்.

இன்று இங்கு வந்திருப்பவர்களின் பல வீடுகளில் பிள்ளைகள் இல்லை. சொத்துகள் இல்லை என்பதை அறிவேன். இவற்றைச் செய்த இந்திய அரசுடன் புலிகள் போராடினார்கள். வெற்றி பெற்றார்கள்.

அந்தக்கால இலக்கியங்களில் தாய் போராடப் போனாள். மகள் போராடப் போனாள் என்ற செய்தியை அறிகின்றோம். ஆனால், தமிழ்ப் பெண்களில் ஈழப் பெண்கள் மட்டுந்தான் துப்பாக்கிகளுடன் போராட்டக் காலத்தில் நின்றுள்ளனர்.

வரலாற்றில் மிகப் பலம் பொருந்திய தலைவர் பிரபாகரன்தான். அவரைக் கொலை செய்ய இரு அரசுகளும் தீட்டிய திட்டங்கள் எல்லாம் தோல்வியடைந்து விட்டன.

...மதிய புகையிரத நிலைய தலைமை அதிகாரி திரு. மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (லோ)

...யின் அணித் தலைவர் மிகவும் சிறந்த முறையில் பந்து வீசி 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது

## முகாமிற்குள் இருந்து எலும்புக் கூடுகள்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சந்தியில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாம் அகற்றப்பட்ட பின் அக் கட்டிடத்தின் முன்றலில் இருந்த கிடங்கு ஒன்றிலிருந்து ஐந்து பேரின் எலும்புகள் எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் விபரம் வருமாறு வீரசிங்கம் மகேஸ்வரி 53 யசோதா வீரசிங்கம் வயது இருபது மற்றும் ரத்தின கோபால் (செட்டியார்) திருமதி. ரத்தினகோபால் ஆகியோருடன் இவர்களின் மூன்று வயது குழந்தையும் எலும்புகளாக மீட்கப்பட்டுள்ளனர்.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவ தாக்குதல்களின் போது இவர்கள் பதுங்கு குழிகளில் இருந்தபோது இந்திய இராணுவத்தால் பதுங்கு குழிக்குள்ளேயே வைத்து கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் நுளம்புத்திரிகளும், ரேடியோ ஒன்றும் எவர் சில்வர் தட்டுகளும் மீட்கப்பட்டுள்ளது என கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர் ஒருவர் தெரிவிக்கிறார்.

மீட்டெடுக்கப்பட்டவர்களின் எலும்புகளுக்கு உரிய சமயக்கிரிகைகளை தாம் செய்துவிட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார். (லோ)

...ளர்கள் தமக்கு யாழ். நகரில் லொறிகளை நிறுத்துவதற்கு தகுந்தஇடம் தருமாறு ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வீதிப்போக்குவரத்து விதிகளால், லொறிகளை கஸ்தூரியார் வீதியில் நிறுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நேற்று இவர்கள் லொறிகளில் ஊர்வலமாகச் சென்று ஆணையாளரைச் சந்தித்தனர்.

புதிய போக்குவரத்து விதிகளால் தற்போது சத்திரச்சந்தியில் நிறுத்த அனுமதிவழங்...

...யில் ஒரு இடம் ஒதுக்கித்தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (லோ)

## வீதியைத் திருத்த நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலுள்ள கிராமக்கோடு- வராத்துப்பளை வீதி திருத்திப் புனரமைக்கப் படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வீதியைத் திருத்திப் புனரமைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வராத்துப்பளை சனசமூக நிலையம் இலங்கை வீதிகள் அபிவிருத்தி அதிகார சபைத்தலைவரை அவசரமாகக் கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது (25)

### 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பெற்ற தாய் எனை
மறப்பினும் என் தமிழ்
மண்ணை நான் மறவேன்



சி. யோன்சன் குயின்ரன்

(மைக்கல்)

ஜனனம்
23. 2. 1971
வீர மரணம்
23. 3. 1989

பெற்றார், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

மணிப்புரி.

### பலவீனத்தைக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை பூபதியின் தியாகம் விஞ்சி நிற்கின்றது. அவரின் நினைவாக இன்று மக்கள் அவரைப் பூசிக்கின்றனர். தனது இரண்டு புத்திரர்களையும் ஸ்ரீ லங்கா இராணுவத்தின் கோரத்தாக்குதலுக்குப் பலிகொடுத்த அந்தத் தாயின் தியாகம் செறிந்த போராட்டம் உலகின் கண்களைத் திறந்திருக்கின்றது. உலகிலேயே உண்ணாவிரதமிருந்து மரணித்த முதலாவது வீரப் பெண் அன்னை பூபதியாகும், இது தமிழீழப் பெண்கள் தமது இலட்சிய உரிமைக்காக எந்த விலையையும் வழங்கத் தயாராக இருப்பதைத் தெளிவு படுத்துகின்றது.

புலிகளின் மகளிர் பொறுப்பாளர் ஆஞ்சனேயன் உரையாற்றுகையில் ''அன்னை பூபதி இருபதாம் நூற்றாண்டின் சகாப்தம் - எமது பெண்களின் போராட்டத்தைக் கொச்சப்படுத்த திருமதி டேவிட் அன்னம்மாவை இந்தியப்படை பயன்படுத்த முயன்றபோது மாபெரும் தியாகத் தீயில் ஈழத் தமிழ்ப் பெண்களின் மானத்தைக் காப்பாற்றியவர் அன்னை பூபதியேயாகும். அவர் தனது போராட்டத்துக்கு சட்டரீதியான பாதுகாப்பைத் தேடிக் கொண்டு தியாகத் தீயில் குதித்தவர் அவரைப்போன்ற ஆயிரமாயிரம் தமிழீழ மக்களினதும் மரணித்த போராளிகளதும் தியாகங்கள் வீண்போகாது. விடுதலைப்போரில் சிந்தியஇரத்தங்கள் என்றும் வீண் போவதில்லை இது வரலாற்றின் பாடம் என்றார்.

கூட்ட முடிவில் 'நடந்து வந்த பாதை' வில்லிசையும், 'விடிவை நோக்கி' என்ற நாடகமும் நிகழ்த்திக்காட்டப்பட்டது.

## செய்திகள் வழங்கத்தடை

(யாழ்ப்பாணம்)

செயலக அதிகாரிகள் எவரும் பத்திரிகைகளுக்கு செய்திகள் எதுவும் வளங்கக் கூடாது என அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் செயலகத்துக்குள் சுற்றறிக்கை ஒன்றை வழங்கி உள்ளார் இதனால் அதிகாரிகள் பத்திரிகையாளர்களுக்கு எதுவித செய்தியும் வழங்க மறுக்கின்றார்கள். (லோ)

### அநுரா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்ற நடவடிக்கை இடம் பெறுவதாகத் தெரிய வருகின்றது.

இதற்கு முன்னோடியாக அநுராவின் ஆதரவாளரான திசமாறகம சிறிலங்காகட்சி அமைப்பாளர் கட்சியில் இருந்து வெளியேற்றப் பட்டதும் நேற்று முன்தினம் அவசரகாலச்சட்டப் பிரேரணை மீது அநுரா பண்டாரநாயக்கா பேசாததும் உள்ளன என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

### இன்று காலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொள்வார்கள் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை நாட்டிலுள்ள சகல பௌத்த பாடசாலைகளிலும் இந்தியப்படை வெளியேறுவதையிட்டு சமய நிகழ்ச்சிகள் நடை பெறவுள்ளதாக அமைச்சர் லொக்குபண்டாரா தெரிவித்துள்ளார்.

### இந்தியப்படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தையின் மூலம் நீண்ட கால எமது போராட்டத்திற்கான இலக்குகளை அடையலாம் என்று நாம் நம்புகிறோம். 17 வருட காலமாக மக்களின் உரிமைகள் பறிக்கப் பட்டு, மக்களுக்கெதிரான வன்முறைச் சூழ்நிலையிலேயே எமது ஆயுதப் போராட்டம் நடை பெற்று வந்தது.

''இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் இந்தத் தீவின் சகல பகுதிகளிலும் ஆக்கிரமிப்புக் கெதிராக குரல் எழுப்பப்பட்டதே தவிர, தமிழ் மக்கள் மீது இந்தியராணுவம் நடாத்திய கொடுமைகளை தெற்கில் உள்ள எவரும் கண்டிக்கவில்லை. இந்தப் படையின் நோக்கத்தை முறியடிப்பதற்கு, வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களே போரிட்டனர். அப்போராட்டத்தில் வெற்றியும் கண்டனர்.

என்று தெரிவித்த திரு. மாத்தயா, இந்த வகையில், இன்று நாம் அமைதியான முறையில், பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தரத் தீர்வைக் காணும் முயற்சியை முன் வைத்துள்ளோம். எமது இந்த முயற்சியைப் புரிந்துகொண்டு சகல மக்களையும் எம்முடன் ஒத்துழைக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம்'' என்றார் அவர். (தி)

### கிராமம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குகள், சிரமதானங்கள் ஆகியவற்றில் 15,000 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதாக தகவல்கள் தெரிவித்தன. மேற்படி வைபவங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் எஸ். கரிகாலன் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு வீதியெங்கும் தென்னங் குருத்துகள், மாவிலைகள், வாழை மரங்கள், அஞ்சலிப் பதாதைகள் கட்டப்பட்டன. பொது இடங்களில் அன்னையின் உருவப் படம் வைக்கப்பட்டு ஒலி பெருக்கியில் முகாரி ராகம் ஒலித்த வண்ணம் உள்ளன. மேற்படி வைபவத்தை நடாத்துவதற்கு பல்வேறு பொது அமைப்புக்களும், அன்னையர் முன்னணியுடன் இணைந்துள்ளது. அஞ்சலி சுவரொட்டிகளும், பிரசுரங்களும் தினமும் வெளியாகி வருகின்றது. சிரமதானங்கள் பல அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்படுகிறது. அரச சார்பாற்ற அமைப்பு ஒன்று சின்ன ஆஸ்பத்திரிச் சந்தியில் நினைவுத் தூபி ஒன்றைக் கட்டிக் கொடுக்க முன் வந்துள்ளது

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் முன் சுழற்சி முறை உண்ணாவிரதம் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. ஆதரவாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் கிளைகளும் கலந்து கொள்கின்றன. இது இவ்வாறிருக்க அன்னை பூபதி வைபவங்களில் வாழை மரங்களை கட்ட வேண்டாம் என எஸ். கரிகாலன் கேட்டுள்ளார். வாழைமரம் தமிழ் பேசும் மக்களின் பொருளாதார சொத்து என்பதால் அதனை கட்ட வேண்டாமென்றும் மாவிலை, தென்னங் குருத்துக்களை கட்டுமாறும் கேட்டுள்ளார். (37)

### மட்டக்களப்பின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடு காரணமாக துண்டிக்கப்பட்ட தொலைபேசி இணைப்புகள் வழங்குவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன எனவும் அவர் சொன்னார்

தொலைபேசி பராமரிப்புக்கு 1 இலட்சம் ரூபாவும் புனர்வாழ்வுதிட்டத்திற்கு 3 இலட்சம் ரூபாவும், புதிய இணைப்புகளுக்கு ரூபா 2 இலட்சம் பெறுமதியான வயர்களும் தேவைப்படுகின்றன என்றுஅவர் குறிப்பிட்டார். (37)

### தபால்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் ஊழியர்களின் வேலை மறுப்பு நடைபெற்றபோது 24- மணிநேரத்திற்குள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அவர் தெரிவித்ததை அடுத்து ஊழியர்கள் வேலை மறுப்புப் போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

அதன்படி பிராந்திய கணக்காய்வாளர் அலுவலகத்தில் சேர்க்கப்பட்ட 3 பேர்களும், பிராந்திய நிர்வாக அலுவலகத்தில் ஒருவரும், பிரதேச அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒருவரும், வண்ணார் பண்ணை, சுண்டுக்குழி உப தபால் நிலையங்களில் இருந்து தலா ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டு அந்த இடங்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள் அல்லது சேவை மூப்பு அடிப்படையில் திங்கட்கிழமை தொடக்கம் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப் படுகிறது. (21)

### மலேஷியாவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டம் பணம், பாஸ்போர்ட், விமான ரிக்கற் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் உறவினர்கள் இந்த ஏஜென்ஸிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களை இங்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறும் வெளிவிவகார அமைச்சசு தெரிவித்துள்ளது.

## சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அதிகரித்துவரும் சுகாதாரப் பிரச்சினை சம்பந்தமான கருத்தரங்கொன்று வரும் முப்பதாம் திகதி நாவலர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக் கலந்துரையாடல் மாநகரசபை ஆணையாளர் திரு. வி பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து மாநகர சபை உத்தியோகஸ்தர்கள் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்படும் வைபவமும் இடம் பெறும் எனவும் தெரியவருகிறது.

இதனை யாழ். றோட்டறிக் கழகம் ஒழுங்கு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

## அடுத்த கூட்டத்தொடர் ஏப்ரல் 4-இல்

பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அடுத்த மாதம் நான்காம் திகதி சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைப்பார்.

இது தொடர்பான ஜனாதிபதியின் விசேட பிரகடனம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போது நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத் தொடரும் நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைக்கப் பட்டதாக ஜனாதிபதி பிரகடனம் செய்துள்ளார்.

### அரச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது,

மன்னார் செயலகத்தில் இது தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் பாதிக்கப்பட்ட திணைக்கள கட்டடங்களின் விபரங்களும் தெரிவிக்கப்பட்டன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது